
# மலர்

ஆகஸ்ட் 1970
விலை சதம் -/50.



# ஒரு கடிதம்

ஆசிரியர் ''மலர்'',

ஈழத்திருநாட்டில் இலக்கியப் பத்திரிகைகள் வாழ்வதற்கு அல்லது தற்கொலை செய்துகொள்ளாது தடுப்பதற்கு இலக்கியத்துறையில் ஈடுபாடுடையவர்கள் முன்வராதபோது, எப்படி வாசகர்களைக் குறைகூற முடியும்? பெரிய எழுத்தாளர் என்பவர்களில், பலர் தங்களுடைய விடயம் அல்லது உறவினர் ஊர்க்காரர்களுடைய விடயங்கள் இடம்பெருவிட்டால் அந்தப் பத்திரிகைக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. இந்த இழிநிலை எழுத்தாளனிடமிருந்து முற்ருக விடைபெறவேண்டும். உண்மையான எழுத்தாளன் என்பவன் மனச்சாட்சியை மதித்து வாழவேண்டும்.

ஒவ்வொரு எழுத்தாளனும் தரமான, இலக்கிய ஏடுகளுக்குத் தனது முழு ஆதரவைக் கொடுக்கவேண்டும். அத்துடனமையாது அந்த ஏட்டை வளர்க்கும் பணியில் தானும் முன்னின்று உழைக்கவேண்டும். தானும் மனிதன் தான் என்ற உணர்வோடு பத்துப் பிரதிகளை விற்று, அல்லது பத்து சந்தாதாரர்களைச் சேர்த்து, தங்களது நண்பர்களையும் தேசிய உணர்வோடு பத்திரிகையோடு தொடர்புபடுத்தினுல் அதுவே அவர்களுடைய இலக்கியச் சேவையாகும்.

இப்படி கொழும்பு, வடக்கு, கிழக்கு, மலையகம் எங்குமிருந்து சந்தா சேர்க்கும் நல்ல உள்ளமுடையோர்களின் பெயர்ப் பட்டியலை 'மலரில்' வெளியிடலாம். அப்போது யார் இந்நாட்டு இலக்கியத்தின்மீது உண்மையான பற்றுடையவர்கள் என்பது பகிரங்கமாகவே தெரியும்.

'மலர்' எங்களுடையது என உரிமை கொண்டாடி மலர்ந்த 'மலர்' வாடாதிருக்க ஈழத்து எழுத்தாளர்கள் வழிசெய்யவேண்டும்.

இவ்வண்ணம்

நெ. பி. பழனிவேல்.

கும்பால்வளை.

A. Kamala -

# பத்து சந்தா

## அல்லது

# பத்து பிரதிகள் திட்டம்

கும்புறுப்பிட்டி அன்பர் நெ. பி. பழனிவேல் அவர்கள் எழுதியுள்ள ஒரு கடிதத்தை எதிர்ப்பக்கத்தில் பிரசுரித்துள்ளோம். ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்காக அந்தரங்க சுத்தியுடன் உழைக்கும் ''மலர்'' சஞ்சிகைக்கு ஒவ்வொரு இலக்கிய அபிமானியும் பத்து சந்தாக்களைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும் அல்லது மாதாமாதம் பத்து பிரதிகளை விற்றுக் கொடுக்கவேண்டும் என்ற கருத்தை அவர் அதில் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே பல இலக்கிய அன்பர்கள் (பெண்கள் உட்பட) அப்படிச்செய்து வருகிறார்கள் இருப்பினும், இத்திட்டத்தை பரந்த அடிப்படையில் வாசகர்கள் மேற்கொண்டால் ''மலர்'' வாடிவிடாது காப்பற்றமுடியும் என்ற நம்பிக்கையில், ''மலர்'' வாசகர் ஒருவர் தெரிவித்த இந்த ஆலோசனையை ''மலர்'' வாசகர்முன் சமர்ப்பிக்கிறோம்.

வியாபார நோக்குடன் ''மலர்'' நடத்தப்படவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். எனவே முழுமனதுடன் இத்திட்டத்தில் பங்குகொண்டு ''மலர்'' பெருமளவில் ஈழமெங்கும் பரவும்வகை செய்தால், (1) இலக்கிய தாகம் கொண்ட லட்சியப்பத்திரிகை ஒன்று சாகாமல் உயிர்பிழைக்கும்; (2) ஈழத்து எழுத்தாளர்களுக்கும், ஈழத்து இலக்கிய உலகுக்கும் நன்மை ஏற்படும் (3) தரக்குறைவான சஞ்சிகைகளின் கோரப்பிடியிலிருந்து ஈழத்து வாசகர்களை மீட்கமுடியும்.

குறிப்பு:

1. பத்து சந்தா சேர்த்தனுப்புபவர்கள் சந்தா விண்ணப்பத்தை உபயோகிக்க வேண்டியதில்லை. தனிக் காகிதத்தில் சந்தாதாரர் பெயர்களையும், முகவரிகளையும் எழுதி அனுப்பலாம்.
2. பத்துப்பிரதிகள் பெற்று நண்பர்களுக்கு விற்பனை செய்ய விரும்புகிறவர்கள் தனது சொந்த முகவரியை மட்டும் தெரிவித்தால் போதுமானது.

காசுக்கட்டளைகள், காசோலைகள், அஞ்சற்கட்டளைகள் தயாரித்து அனுப்ப வேண்டிய முகவரி:. நிர்வாகி, 'மலர்', 21, மத்திய வீதி, மட்டக்களப்பு.

ஈழத்தில் மிகச் சிறப்பான முறையில் வெளிவரும் இலக்கிய மாத ஏடு ''மலர்''. இச்சஞ்சிகைக்கு உங்கள் பாராட்டுதல்களைச் செயல்மூலம் தெரிவிப்பதற்கு ஒரேவழி உடனடியாக ''மலர்'' சந்தாதாரர் ஆகுவதுதான். அதே போல், உங்கள் நண்பர்களையும், மற்றும் சுற்றத்தவர்களை யும் 'மலர்' சந்தாதாரர் ஆக்குவது, நீங்கள் இச்சஞ்சிகைக் கும், ஈழத்து இலக்கிய உலகுக்கும், உங்கள் சக்திக்குட்பட ஆற்றும் மகத்தான பணியாகும். அதுமட்டுமல்ல, உங்க ளுக்கு மிகவும் வேண்டியவர்களுக்கு நீங்கள் அளிக்கக்கூடிய மிகச்சிறந்த - நிலையான ஞாபகமுள்ள ஒரு பரிசு ''மலர்'' ஆண்டுச்சந்தா ஆகும். கீழே உள்ள விண்ணப்பப் படிவத் தைப் பூர்த்திசெய்து அனுப்புங்கள். —ஆசிரியர்.

---

நிர்வாகி ''மலர்''
21, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

அன்புடையீர்,

''மலர்'' இலக்கிய மாத ஏட்டினுக்கு ஆண்டுச்சந்தாவாக ரூபா 6/- இத்துடன் காசோலையாக/ மணிஓடராக / போஸ்டல் ஓடராக அனுப்புகிறேன்.

..................................மாதம் முதல் ஒரு வருடத்திற்கு ''மலர்'' பிரதிகளை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இவ்வண்ணம்

..................................................

கையொப்பம்

திகதி..............................................

''மலர்'' அனுப்பவேண்டிய முகவரி:-

..................................................

..................................................

..................................................

இங்கே கத்தரிக்கவும்

# மலர்

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்—பாரதியார்.

செடி: 1 | ஆகஸ்ட், 1970 | மலர்: 6

## மகரந்தம்


**கருத்து** — பக்கம்

வணக்கம்............ 4
ஈழத்துப்பத்திரிகை............ 5

**கதை**

இனம் ............ எம். ஐ. எம். மஷ்ஹூர் ... 12
இன்னும் மனிதனுய்............ வேதாந்தி ... 17
கன்னத்தில் நீ............ திமிலைத்துமிலன் ... 28
அன்புச் செல்வம் ............ ''கண்மணி'' ... 37
வாப்பா வருவார்............ திக்குவல்லை கமால் ... 45
பயங்கர வேட்டை............ எஸ். சிதம்பரப்பிள்ளை ... 50

**கவிதை**

யாழ்நூல்............ முத்தழகு ... 8
உங்கள் சொத்து............ குமார. இராமநாதன் ... 9
என்னை விட்டு............ செ. குணரெத்தினம் ... 11
சிரிக்கின்றேன்............ எஸ். எல். எம். ஹனீபா ... 16
ஏகினேன்............ ப. கோபாலன் ... 27
ஏனிந்த மோகம் ............ மாறன். யூ. செயின் ... 63

**கட்டுரை**

போடிமகள் பொன்னம்மா ............ 33
வள்ளல் சீதக்காதி ............ 56

**பிற**

பூங்கா ............ 7
ரீங்காரம் ............ 10
ஒரு அனுபவம் ............ 14
ஈழத்து ரத்தினங்கள் ............ 54


---

கதைகள் யாவும் கற்பனை. கட்டுரை கவிதைகளில் உள்ள கருத்துகளுக்கு அவற்றின் படைப்பாளிகளே உரிமையாளர்.

—ஆசிரியர்.

# வணக்கம்

"மலரி''ன் புதிய அமைப்பில் பொலிவு குன்றியிருப்பதை வாசகர்கள் அவதானித்திருப்பார்கள். காலக்கிரமத்தில் இவ்வமைப்பில் மேலும் கவர்ச்சியை ஏற்றிவிடலாம் என நம்புகிறேம்.

வாசகர்களைத் திருப்தி செய்வதற்காக 'மலரின்' அளவைச் சிறிதாக்கியபோதிலும், இம்மாற்றத்தினல் தயாரிப்புச் செலவில் சிறுது சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முடிகிறது. இருப்பினும் நஷ்டம் ஏற்படுவதை இன்னமும் தவிர்க்கமுடியவில்லை. காரணம் நாம் எதிர்பார்த்தபடி விளம்பரங்கள் கிடைக்காமையே.

ஒரு பத்திரிகையின் ஜீவநாடி விளம்பரங்கள் தாம் என்பதை வெளிப்படையாகச் சொல்லிக்கொள்வதில் எவ்வித கௌரவக்குறைவும் இல்லை. விளம்பரம் பெறுவது சம்பந்தமாக நாம் மேற்கொண்டுள்ள தொடர்ந்த முயற்சிகள் இன்னும் பலன்தரவில்லை. வெகுவிரைவில் கொழும்பு வர்த்தக ஸ்தாபனங்களின் கண்கள் திறக்கும் என எதிர்பார்க்கிறேம்.

அப்படியும் இலங்கையில் வெளியாகும் ஏனைய சஞ்சிகைகளுடன் ஒப்பிடும்பொழுது ''மலர்'' மிகக் குறைந்த விலையில் கிடைப்பதாகவே கொள்ளலாம். அதுமட்டுமல்ல தமிழகத்திலிருந்து இங்குவரும் வார, மாத சஞ்சிகைகளுடன் ஒப்பிட்டாலும், அச்சஞ்சிகைகளின் அரைவாசிக்குமேல் உள்ள விளம்பரப் பக்கங்களை நீக்கிவிட்டுப் பார்த்தால், ''மலர்'' விலையைப் பொறுத்தவரை அவற்றைவிட லாபகரமானதாகவே தென்படும். நாம் எதிர்பார்க்கும் அளவு விளம்பரங்கள் கிடைக்கத் தொடங்கினல் ''மலரி'ன் பக்கங்களை மேலும் அதிகரித்து வாசகர்களை மேலும் மகிழ்விக்க முடியும்.

''மலர்'' வியாபார நோக்குடன் நடத்தப்படவில்லை என்பதை ஏற்கனவே பலமுறை சுட்டிக்காட்டியுள்ளோம். வாசகர்கள் துணையுடன் நடாத்தப்படும் இச்சஞ்சிகைக்கு மேலும் வாசகர் ஆதரவு தேவைப்படுகிறது. அதற்காக ''பத்து சந்தா அல்லது பத்துப் பிரதி விற்பனை'' என்ற திட்டத்தை இவ்விதழில் வெளியிட்டுள்ளோம். வாசகர்கள் முழுமனதுடன் இத்திட்டத்தில் பங்குபற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேம்.

— ஆசிரியர்.

# மலர்

## தமிழகப் பத்திரிகைகளுக்குத் தடை

"தென்னிந்தியப் பத்திரிகைகளைத் தடைசெய்க!'' என்று நீண்ட காலமாக குரல் எழுப்பிவந்த ஈழத்து இலக்கிய அன்பர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியை மக்கள் அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது. ஆம் தரமற்ற தென்னிந்தியப் பத்திரிகைகளுத் தடைவிதிப்பது சம்பந்தமான செய்தியைப் பத்திரிகைகளில் படித்தபோது ஈழத்து எழுத்தாளர்களும், வாசகர்களும் பெரிதும் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள்.

புத்திபூர்வமாக இம்மகிழ்ச்சியை அனுபவிக்கவேண்டுமென்றால் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை நினைவு படுத்திக்கொள்ளல் நன்று.

தமிழகத்திலிருந்து இறக்குமதியாகும் தரக்குறைவான பத்திரிகைகளை தமிழகத்து வாசகர்கள் எல்லோருமே விரும்பிப்படிப்பதாக நாம் நினைத்துவிடக்கூடாது. உண்மையான இலக்கிய ரசனையுள்ள சிறிய கூட்டம் ஒன்று அங்கும் இப்பத்திரிகைகளுக்கு எதிராகப் போர் நடத்தி வருகிறது. ஜனரஞ்சகப் பத்திரிகைகள் என்று இலங்கையில் பதினாயிரக்கணக்கில் விற்பனையாகும் 'கல்கி,' 'ஆனந்தவிகடன்,' 'குமுதம்', 'தினமணிக்கதிர்,' போன்ற பத்திரிகைகளே இலக்கியத்தை வளர்க்காது 'வியாபாரம்' செய்கின்றன என்ற கண்டனக்குரல் அங்கு எழுப்பப்பட்டுள்ளது.

''தீபம்'' போன்ற இலக்கிய சஞ்சிகைகளும், நா.பா., அகிலன், ஜெயகாந்தன் போன்ற இலக்கியப் பிரக்ஞை உள்ள எழுத்தாளர்களும் நீண்டகாலமாக இப்போரை நடத்திவந்துள்ளனர். ''தீபம்,'' ''கலைமகள்,'' ''கலைக்கதிர்,'' ''மஞ்சரி'' போன்ற தரமான பத்திரிகைகள் இன்னும் அங்கு ஜீவமரணப் போராட்டமே நடத்திவருகின்றன. (இங்கும் அப்படியே)

இது எதைக் காட்டுகிறதென்றால், வாசகர்கள் எங்கிருந்தாலும் சரி அவர்கள் ரசனையை நல்லிலக்கியத்தின்பால் திருப்பாதவரை இலக்கிய சஞ்சிகைகள் தழைக்கமுடியாது; இலக்கியம் வளரமுடியாது என்பதைத்தான்! இதுகாலவரை தோன்றியுள்ள எண்ணற்ற ஏடுகள் அனைத்தும் வாசகர்கள் விரும்புவதையே கொடுத்து வந்ததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. வாசகர்கள் விரும்புவதைக் கொடுக்காது, வாசகர்கள் எதை விரும்பவேண்டுமென்று இலக்கியகர்த்தா விரும்புகிறானோ அதை வாசகர்களுக்குக்

கொடுத்து வந்திருந்தால் இன்று அவர்கள் ரசனை இலக்கியத்தை நாடிநிற்கும்; இலக்கியம் வளர்ந்திருக்கும். முந்திய ',மலர்'' ஏட்டின் தலையங்கங்களில் நாம் இதுபற்றிக் குறிப்பிட்டிருந்தோம்.

''தென்னிந்தியப் பத்திரிகைகளைத் தடைசெய்க!'' என்று குரல் எழுப்பும் ஈழத்திலுள்ள வாசகர்கள் அனைவரும் இலக்கியப் பிரியர்கள் என்றோ இங்கு வெளியாகும் பத்திரிகைகள் எல்லாம் இலக்கியத்தரமான பத்திரிகைகள் என்றோ நாம் கூறிவிட முடியாது.

இந்தியப் பத்திரிகைகளைத் தடைசெய்கிற அதே அளவு கோலைக்கொண்டு பார்த்தால் ஈழத்திலேயே தடைசெய்யவேண்டிய பத்திரிகைகள் பல அகப்படும். பிரபல வாரமஞ்சரிகளும், வாரமலர்களும் இங்கு பெருமளவில் விற்பனையாவதாக ஏ.பி ஸி. அத்தாட்சிப்படுத்தியுள்ள சங்கதியை வெளியிட்டுப் பெருமைபடுவது ஒன்றே ஈழத்து வாசகர்கள் நிலையை நமக்குப் படம் பிடித்துக்காட்டுகின்றன.

எனவே ஈழத்து வாசகர்கள் அனைவரும் இனியாவது தமது ரசனையை நல்லிலக்கியத்தின்பால் திருப்பவேண்டும். கவர்ச்சி ஏடுகளை விலக்கி உண்மையான இலக்கிய ஏடுகளை விரும்பிப்படித்து அதன்மூலம் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குத் தம்பங்கைச் செய்ய வேண்டும். தென்னிந்தியப் பத்திரிகைகளைத் தடை செய்வதனால் ஏற்படவேண்டிய உண்மையான பலன் ஏற்படுவதற்கு வழி செய்ய வேண்டும்.

தேசிய உணர்வுகொண்டு ஒரு வெளிநாட்டுப் பொருளின் இறக்குமதியைத் தடைசெய்தவுடன், அதே பொருளை பல மடங்கு விலைகொடுத்து பகீரதப்பிரயத்தனம் செய்து 'கள்ள மார்க்கெட்டில்' பெறும் நிலை ஏற்பட்டுவிடும். அந்த நிலை ஈழத்து இலக்கியத்திலும் ஏற்பட்டுவிடக்கூடாது. அதுமட்டுமல்; தென்னிந்தியப் பத்திரிகைகளைத் தடைசெய்தவுடன் 'பிஸினஸ்' நோக்கம்கொண்ட சிலர் அதே சரக்குகளைத் தயாரித்து வாசகர்களுக்கு விற்றுப் பணம் சம்பாதிக்கும் தந்திரத்தை அல்லது துரோகத்தைச் செய்ய முன்வரலாம். அந்தநிலை ஏற்படாதவாறு ஆட்சியாளர் போதிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

'உண்மையான இலக்கிய ஏடுகளையே வாங்கிப்படிப்பது' என்ற திடசங்கற்பத்தை ஈழத்து வாசகர்கள் மேற்கொண்டால், தந்திரங்களும், துரோகங்களும் ஈழத்து இலக்கிய உலகைப் பாதிக்காது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

---

## ஒரு ஆராய்ச்சி (?)

ஈழத்தில் பெருமளவில் விற்பனையாகும் சில சஞ்சிகைகள் பற்றிய விபரம் பின்வருமாறு:—

| சஞ்சிகையின் பெயர் | மொத்தப் பக்கங்கள் | சராசரி விளம்பர பக்கங்கள் | இந்திய விலை | இலங்கையில் விற்கும் விலை |
|---|---|---|---|---|
| கல்கி | 80 | 24 | 40 காசு | 65 சதம் |
| ஆனந்தவிகடன் | 96 | 42 | 40 காசு | 65 சதம் |
| குமுதம் | 104 | 26 | 30 காசு | 55 சதம் |



“புவியியல்”

[ஆசிரியர்: க. குணராசா. B. A. Hons]

புவியியல் பற்றிய ஈழத்து ஏடான “புவியியல்” சஞ்சிகையின் 17வது இதழ் வெளிவந்துள்ளது. புவியியல் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய இச்சஞ்சிகையில், மாணவர்கள் புவியியல் கோட்பாடுகளைத் தாமாகவே உணர்ந்து கற்கும்வகையில் கட்டுரைகள் அமைந்துள்ளன. ஆசிரியர் எழுதியுள்ள ‘‘இலங்கையின் தோற்றம்’’ என்ற கட்டுரை இதற்கு உதாரணம். உலகப்புவியியல் பற்றி மாணவர்கள் கிளிப்பிள்ளைப் பாடம் படிப்பதைவிட, நமது ஈழத்தைப்பற்றிய புவியியல் அறிவைப் பெறுவது மிக முக்கியம். அந்தவகையில் இச்சஞ்சிகை மிகத் தேவையான ஒன்று என்பதில் சந்தேகமில்லை.

[விலை சதம்: -/30. கிடைக்குமிடம் ஆசிரியர் ‘புவியியல்’ 40. கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.]

* * *

‘‘எழில்’’

[மாத ஏடு]

[ஆசிரியர்: மனு. அரியநாயகம்]

ஈழத்திலிருந்து வெளியாகும் மற்றுமொரு கலை, இலக்கிய ஏடான ‘‘எழில்’’ சஞ்சிகையின் புதிய இதழ் மிகக்கவர்ச்சியான அமைப்பில் வெளிவந்துள்ளது செல்வி. கீதாஞ்சலி சிவாஜிதுரையின் சுவையான பேட்டிக்கட்டுரையும், ஊரிக்காடு. நடராசா அவர்களின் இசைப்பாடல் ஸ்வர அமைப்பும் ‘‘செந்தாரகை’’ அவர்களின் தொடர் நவீனமும் இவ்விதழில் சிறப்பு அம்சமாக அமைந்துள்ளன. பல புதிய அம்சங்கள் பற்றிய அறிவிப்பும் இல்விதழில் இடம்பெற்றுள்ளன. $\frac{1}{4}$ கிறவுன் அளவில் 40 பக்கங்களில் வெளிவருல் இச் சஞ்சிகையின் விலை சதம் -/30 மட்டுமே.

* * *

[கைத்தொழிற்கட்டுரை ‘‘தூய பற்பொடி’’ இடமின்மையால் அடுத்த இதழில் வெளிவரும் — ஆசிரியர்]

# யாழ்நூல் தந்தோன்


1. தங்கக் கதிரோன் கிழக்கிலே
   தவழும் பொலிவாய்ப் பிறப்பிலே
   மங்கும் தமிழை வளர்க்கவே
   வரம்பெற் றுதித்தான் வித்தகன்.

2. வானும் கடலும் இசைபாட
   மலையும் நதியும் இசைபாட
   தேனும் பாலும் பாய்ந்தோடும்
   திசையிற் பிறந்தான் நற்புலவன்.

3. விபுலா னந்தன் இசையாய
   மீன்கள் மகிழ்ந்து தமிழ்பாட
   செவிவாய் நிறைய அதையுண்டு
   தென்னங் கீற்றில் குயில் தாவ.

4. யாழின் நளினக் கலையெல்லாம்
   நன்கு ஆய்ந்து நயம் கண்டு
   வாழ்விற் புதுமை செய்திட்டான்
   மலைபோல் யாழ்நூல் தந்திட்டான்.

—மட்டுநகர் முத்தழகு.



# உங்கள் சொத்து

அன்பே என் தசை இன்றே நீங்கள் பெற்று
ஆசையெனில் நாய்களுக்கே உணவிடுங்கள்!
செங்குருதி தனையெடுத்து உங்கள் தோட்டத்
தருக்களுக்கே நீராகப் பொழிந்திடுங்கள்
என்னிதயம் சாம்பலென மாற்றி இன்பக்
கனவுகளைத் துகளாக்கி மகிழ்ந்தி ருங்கள்
கொன்றழிக்க அஃதின்றேல் இதயந் தன்னில்
கொலுவேற்ற நானுங்கள் உடமை யன்றோ?

என்கழுத்தைத் திருகியெடுத்துயிரைப் பற்றி
எழுந்தீயில் வீசுங்கள் ஏனி தற்கு
என்னுண்மைக் காதலது தயங்க அஞ்ச
எதற்கேனும் கலகமிட வேண்டும்? உங்கள்
நன்மைக்காய் நரகத்தின் தீயிற் புல்லாய்
நசிவதற்கோ அதுவன்றி உங்கள்தூய
இன்மார்பில் மலரைப்போல் துயில்வ தற்கோ
என்னன்பே! நானென்றும்
உங்கள் சொத்தே!

மூலம்:
சரோஜினி நாயுடு.



தமிழாக்கம்:
குமார இராமநாதன்.

# ரீங்காரம்

தங்கள் 'மலர்' பத்திரிகையைத் தவருது படித்து வருப வன் யான். அதன் இலக்கியத்தரம் பாராட்டக்கூடியதாக வும் அதே சமயம் ஈழத்தில் சிறந்த இலக்கியப் பத்திரிகை கள் தோன்றமுடியும் என்ற நம்பிக்கையை இங்குள்ள இலக் கியப் பிரியர்கள் மனதில் வளர்க்கக்கூடியதாகவும் இருக் கிறது.

—அ. சோமபாலன், கொழும்பு.

× × + ×

ஜூன் மாத வெளியீடு கண்டுமகிழ்ந்தேன். 'படிப்பிலக் கியமும் படைப்பிலக்கியமும்' என்னும் பகுதி என்னைக் கவர்ந்தது. அதுபற்றிய கருத்துக்களைத் தாங்கள் மேலும் அதிகம் எடுத்து எழுதவேண்டும் என்பது என் அவா.

—எஸ். ஏ. செய்யதுஹசன் மௌலாஞ, நிந்தவூர்.

× × × ×

தங்கள் 'மலரி'ன் மூன்ருவது ஏட்டையும் வாசித்த பின்னர் இதை எழுதுகின்றேன். ஒவ்வோர் இதழும் ஒன்றை யொன்று விஞ்சி வளர்வதுகண்டு புளகாங்கிதமடைகின்றேன். என்போன்ற எண்ணற்ற வாசகர்கள் உளம் பூரித்திருப்பார் கள் என எண்ணுகிறேன்.

—கண. மகேஸ்வரன், வெள்ளவத்தை.

× × × ×

இரண்டு மாதங்களாக 'மலர்' வெளிவரவில்லையே என்று பதறித்துடித்த பல நெஞ்சங்களுள் என்னுடையதும் ஒன்று. ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டாற்றப் புறப்பட்ட 'மலர்' வளரும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் உன்னத 'மலரா'க வெளிவருவதையிட்டு என்போன்ற வள ரும் எழுத்தாளர் அனைவரும் பெருமைப்படுவர்.

—'புரட்சிவேந்தன்', அடம்பன்.

× × × ×

[''மலரை''யும் 'மலரி'ன் பணியையும் பாராட்டி நிறையக் கடிதங் களும், கவிதைகளும் வந்துள்ளன. அதிகமான அளவில் இக்கடிதங்களையும், கவிதைகளையும் பிரசுரிக்க நாம் விரும்பினுலும் இடவசதி இல் லாமை அதற்குத் தடைபோடு கிறது. வாசகர்கள் மன்னிக்க வேண்டும். பாராட்டுக் கடிதங் கள் அனுப்பிய அத்தனை அன்பர் களுக்கும் எம் இதயபூர்வமான நன்றி. —ஆசிரியர்)



# என்னைவிட்டு ஓடிப்போ!

## செ. குணரத்தினம்.


விளையாட்டாய் உன்மீது விருப்பம்கொண்டேன்
''விடமாட்டேன்'' என்கிறாய் நியாயந்தானா?
சுளையாகப் பணத்தைநீ சுரண்டியென்னை
சுட்டெரிக்கும் உனக்கு ஒரு இதயமில்லை!

ஒருநாளை உணவையும் மறந்துவாழ்வேன்!
உனைமட்டும் என்இதயம் மறக்கவில்லை!
விரும்பாத என்நெஞ்சில் குடிபுகுந்து
''விடமாட்டேன்'' என்கிறாய் நியாயம்தானா?

நீயாக வந்ததுபோல் என்னைவிட்டு
நெடுந்தூரம் போவாயோ, எனதுவாழ்வை
தானாகமலரவழி செய்வாயோ சொல்!
தவிக்கின்றேன் நான்புவியில்; ஓடிப்போபோ!

குருவிச்சை போலென்னைப் பற்றிக்கொண்டு
கொஞ்சுகிறாய் உன்னுறவு எனக்குவேண்டாம்!
குருபுத்தி போல்சொன்னேன் குணத்தைமாற்று!
கூடாதே என்னோடு விலகிப் போவாய்!

உதட்டளவில் மட்டும்தான் உறவுகொண்டேன்
உண்மையிதை நீயேற்க மறுப்பதேனோ?
இதமான என்வாழ்வைக் கெடுக்கத்தானோ
எழில்வெள்ளைச் சுருட்டேநீ ஓடிவந்தாய்?




உருவகக் கதை.

# இனம்

எம். ஐ. எம். மஷ்ஹூர்.

அர்த்தராத்திரி, கையில் ஒட்டிக் கொள்வதுபோல — பார்வையின் ஊடுருவலை இமையின் எல்லைக்குள்ளேயே தடுத்துவிடும் பூதாகாரமான மையிருள்; வானத்தை முட்டிய புகை மூட்டமாக, உலகை முக்காடிட்டு மூடிக்கொண்டிருந்தது பனிப்படலம்.

நிசப்தமான அந்த நிலையிலே கொட்டும் பனியின் குளிரைத் தாங்க முடியாத ஆற்றாமையோடு தெருநாய் ஒன்று சாம்பர் மேட்டில் சுருட்டிக்கொண்டு படுத்திருந்தது.



மேலும் நேரம்போக அதனால் குளிரைத் தாங்கவே முடியவில்லை. எழுந்துநின்று உடம்பை முறித்து, பின்னங் கால்களுக்குள் வாலைத்தாழ்த்தித் தன் மூச்சை ஆனமட்டும் அடக்கி 'ஓ' வென்று ஊளையிட்டது.

அமைதியின் அரவணைப்பில் துகில் கொண்டிருந்த அந்த அகால வேளையில் அதன் பயங்கரக் கொடூரத் தொனி ஊரெல்லாம் பரந்து வியாபித்து நிறைந்தது. அதையடுத்து, அந்த ஊளைக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஊரிலுள்ள அத்தனை நாய்களும் ஊளையிட்டன. அந்த ஊரே நாய்களின் ஊளையால் முழங்கிக் கொண்டிருந்தது. ஓர் அமுக்கமான திணறலெடுக்கும் பயங்கரம்!

மீண்டும் அமைதி; அந்த நாய் மட்டும் சாம்பர் மேட்டில் குந்திக் கொண்டிருந்தது. அவ்வேளை மிகச் சோர்ந்து தளர்ந்த நடையில் அசைந்து வந்த பால்வண்ணப் பூனையொன்று நாயின் முன்னே வந்து, சிறிது எட்டக்குந்திக் கொண்டது. 'மியாவ், மியாவ்' என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டது.

நாய் இருக்கையை விட்டெழுந்து ஒருமுறை சிலிர்த்துக் கொண்டது. காதுகள் விரிந்து மடிய கண்களில்

அனற் பொறி தெறிக்க அப் பூனையைப் பிடித்துக் குதறும் எண்ணத்துடன் ''உர் .....'' என்று உறுமியது.

பூனை தற்காத்துக்கொள்ளும் இயல் பூக்கத்தால் தன்னைச் சுதாகரித்துக்கொண்டது. ''பெரியாரே! சமூகரீதியாகப் பார்க்கப் புகின், நாமெல்லோரும் ஒன்றே என்றாலும் இனரீதியாக நமக்குள்ளே புரையோடிய பகைமையும், வேற்றுமையும் தங்களுக்குச் சீற்றத்தைத் தூண்டிக் கொழுந்து விட்டெரியச் செய்து விட்டன என்பதை நானறிவேன். ஆயின் நான் இச்சணம் சந்தேக நிவர்த்தி ஒன்றுக்காகவே தங்கள் பாதக்கமலத்தே வந்துற்றேன்.'' என்று பணிந்து கேட்டுக்கொண்டது பூனை.

நாய் 'ளொள், ளொள்' என்று சாந்தமாகக் குரைத்து, தன் முகத்தில் நகை மலர் விரித்து,பகைமை ஒழிந்த மனமொப்புதலைக் காட்டிக் கொண்டது. ''உன் உள்ளத்தைக் குடைந்த சந்தேகந் தான் யாதோ?'' என்று ஞான போதனாசிரியனுக்குரிய பெருந்தன்மையோடு கேட்டது.

''பெரியாரே! சணநேரத்திற்குமுன் தாங்கள் இவண் வந்துற்று ஊளையிட்டபோது, உம் அடி ஒப்பி ஊர்க்கண் உள்ள அத்தனை நாய்களும் என்னமாய் ஒத்தூதின! ஆகா! உங்கள் உறவின் வலிமையை என்னென்பேன்; என்னென்பேன்! என் மெய் சிலிர்த்து விட்டதே! இனம் என்றால் இப்படியன்றோ மிளிரவேண்டும்! என்றாலும் பெரியோய்! ......'' என்று பேச்சை முடிக்காமல் இழுத்து நிறுத்தியது பூனை.

தன்னையும், தன தினத்தாரையும் பூர்வவிரோதி ஒருவன் புகழ்ந்துரைபாடக் கேட்டதும், நாய் மகிழ்ச்சியின் எல்லைக் கோட்டையே தாண்டிவிட்டது. குந்திய வண்ணமே வாலை ஆட்டியது போதாதென்றெண்ணி, எழுந்து நின்று வெற்றிக்கொடியாக வாலை ஆட்டிவிட்டுக் குந்திக் கொண்டது. ''நீர் இன்னும் உமது குறிக்கோளுக்கு வரவில்லை என்று நம்புகின்றோம்'' என்று தன் மதிப்போடு கேட்டது.

''என்றாலும் பெரியோய்! நீங்கள் ஊளையிடுவதில் காட்டும் இன ஒற்றுமையை உணவு கொள்ளும் விஷயத்தில் ஏன் கடைப்பிடிப்பதில்லை.'' என்று மிக அடக்கமாகக் கேட்டது பூனை.

நாய் அகங்காரச் சிரிப்பாக உரத்துக் குரைத்தது. ''கொள்கை அளவில் நாங்கள் எல்லோரும் ஓரினம் என்று காட்டவே அப்படிக் குரைப்போம். ஆனால், சொல்வதையெல்லாம் செயலில் காட்ட முடிகிறதா? அது மனிதனாற் கூட முடிவதில்லை.'' என்று ஆத்திரத்தோடு சொன்ன நாய் பூனையை ஏறிட்டுப் பார்த்தது.

பூனை சந்தேகத் தெளிவு பெற்ற பாவனையில் 'மியாவ், மியாவ்' என்று சாந்தமாகக் கூறியது.

***

# ஒரு அனுபவம்

## அவன் மனிதன்

அன்று எனக்குத் தாங்கமுடியாத சுகவீனமாக இருந்தது. எப்படியும் வீடு செல்லவேண்டும் என்பதினுல் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டேன். யாழ் புகையிரத நிலேயம் வந்துசேர இரவு மணி 11 ஆகிவிட்டது. எனது வேதனையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு வெளியேவந்து பார்த்தேன். எனது இருப்பிடம் போவதற்கு எனக்கு ஒரு வாகனமும் கிடைக்கவில்லே. தனிப்பட்டவருக்குச் சொந்தமான கார் ஒன்று நின்றது. நெருங்கிப்பார்த்தேன் அவர் ஒரு பெரிய மனிதர்போல் தோற்றமளித்தார். நான் அவரிடம் என்னுடைய நிலேமையை விளக்கி எனக்கு உதவி செய்யுமாறு வேண்டினேன். நான் எவ்வளவோ தயவாகக் கேட்டும், கேட்காதவர்போல் அவர் தன்னுடைய காரில் ஏறிப் போய்விட்டார்.

அந்தக் காரில் சாமான்களே ஏற்றிய தொழிலாளி (போட்டர்) நான் அந்த மனிதரிடம் சொன்னவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தார். கார் புறப்பட்டுச் சென்றதும் அந்தப் போட்டர் நான் போகவேண்டிய இடம் அறிந்து தனது சைக்கிளில் என்னே ஏற்றிக்கொண்டு சென்ருர். அவருக்கு நான் பணம் ஏதாவது கொடுக்கலாம் என்று பையில் கையை விட்ட பொழுது அவர், ''தம்பி, நீ எனக்கு ஒன்றும் தரத் தேவை இல்லே. என்னேப்போல் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கஷ்டப்படுகிறவர்களுக்கு மனத்தன்மையுடன் உதவி செய். அதுவே நீ எனக்குத் தரும் கூலி'' என்ருர். இன்னும் இச் சம்பவம் என் மனத்தில் பசுமையாக இருக்கிறது.

**—A. S. இரத்தினம், மட்டக்களப்பு.**

× × × ×

## அவன் அருள்

மட்டக்களப்பிலிருந்து திருகோணமலேக்கு ஒரு முக்கிய விஷயமாகச் செல்லவேண்டியிருந்தது. ஆனுல் அப்போது மழைக்காலம் ஆகையால் புகைவண்டிப்பாதை மன்னம்பிட்டியில் தடைப்பட்டிருந்தது. அத்துடன் பஸ் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்தது.

இந்த நிலையில் திருக்கோணேஸ்வரத்துக்குச் செல்வதற்காக வான் ஒன்று புறப்படும் செய்தி தெரியவந்தது. அந்த வானில் நாங்களும் செல்வதற்கு முடிவு செய்தோம். பஸ் போகமுடியாத இடத்தில் வான் போகுமா? என்று கிலர் எங்களை அதைரியப்படுத்தினார்கள். இருந்தாலும், விஷயம் அவசரமாக இருந்தபடியால் நாங்கள் அந்த வானில் சென்றோம்.

மன்னம்பிட்டியை அண்மியபோது ரோட்டில் நீர் நிறைந்திருந்தது. நீரைக் கிழித்துக்கொண்டு வான் சென்றது. ட்ரைவர் வண்டியை மெதுவாக ஓட்டினார். போகப்போக நீர் ஆழம் கூடிக்கொண்டிருந்தது வானில் இருந்த அத்தனை பேருக்கும் நெஞ்சு திக்கென்றிருந்தது. எப்படியோ வான் நீரைக் கடந்துவிட்டது. அதனால் ட்ரைவருக்கு உற்சாகம் பிறந்துவிட்டது. படுவேகமாக வானை ஓட்டினார். உள்ளே இருந்தவர்கள் ''சுவாமியின் அருள் இல்லாமலா போகும்?'' என்று உற்சாகமாகக் கூறினார்கள்.

அவர்கள் இப்படிச் சொல்லி வாய் மூடுவதற்குள் வானுக்குள் பூகம்பம் ஏற்பட்டதுபோலிருந்தது. வான் பக்கத்திலிருந்த காட்டுக்குள் புகுந்து ஓடியது. அதாவது நீரில் தோய்ந்த டயர் வேகமாக ஓடியதால் வான் 'ஸ்கிட்' ஆகிவிட்டது.

வான் ஒருநிலையில் நின்று, என்ன நடந்தது என்று ஊகிப்பதற்குச் சில விநாடிகள் பிடித்தன. நிதானமடைந்து பார்த்தபோது, வானுக்கோ, உள்ளே இருந்தவர்களுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

வானைத் திருப்பி எடுத்துக்கொண்டு எங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். சுவாமியின் அருள் இல்லாமல் போகவில்லை என்பது அப்போது எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறைத்தது.

—செல்வி மோனிகா ராஜா, மட்டக்களப்பு.

× × × ×

'முல்லைமணி'யின் கலைக்கழகப் பரிசுபெற்ற

"பண்டாரவன்னியன்"

(வரலாற்று நாடகம்)

வன்னி நாட்டின் சுதந்திரத்திற்காக இறுதி மூச்சுவரை போராடிய மாவீரனின் வரலாறு.

கிடைக்குமிடம்:-

நா. சுப்பிரமணியன்

கலைமகள் நிலையம், முள்ளியவளை.

விலை: 2-50 (தபால் செலவு உட்பட)

# சிரிக்கின்றேன்!

உள்ளும் புறமும் ஒருநிலையாய்
உருவில் திகழும் உயர்மனிதர்
கள்ளமற்ற வாழ்வதனைக்
கண்டு வாழ்வில் சிரிக்கின்றேன்.

சொல்லும் செயலும் சேர்ந்திங்கு
சொர்க்க வாழ்வு வாழ்பவரை
அல்லும் பகலும் நான்கண்டு
அகமே குளிர்ந்து சிரிக்கின்றேன்.

வெல்லும் அன்பு எனக்கூறும்
வெள்ளை உள்ளம் படைத்தவரை
சொல்லும் கவியில் நான்தொடுத்தே
சுவைத்து நன்கே சிரிக்கின்றேன்.

யேசு புத்தர் அண்ணல்நபி
பேசிச் சென்ற நற்பண்பை
காசுக்காக விற்காதோர்
காட்சி கண்டு சிரிக்கின்றேன்.

கற்பொன்றே தம் உயிரென்று
கருதிக்காக்கும் உளத்தாரை
பொற்பில் உயர்ந்த பூவையரை
புவியில் கண்டு சிரிக்கின்றேன்.


**எஸ். எல். எம். ஹனீபா.**

# இன்னும் மனிதனாய் இருப்பதனால்.....

"வேதாந்தி"

நான் ரொட்டியைச் ாப்பிட்டுக் கொண்டு தூணில் சாய்ந்தபடி நின்றிருந்தேன். எனக்குத் தள்ளிய அருகில் வந்து ஒரு காகம் அமர்ந்தது. நான் சாப்பிடுவதை அது ஏக்கமாகப் பார்த்தது. காகங்களிற்கு லட்சணமான ஜாக்கிரதை உணர்வு அதனிடம் அபரிமிதமாகவே தென்பட்டது. தன் உயிரிற்குப் பெறுமதி இல்லையென்பதை விட ஒரு முறை தன்னை விட்டு அகன்ருல் திரும்பவும் அந்த உயிர் உடலில் புகுந்துகொள்ளாது என்பதை அறிந்து கொண்டது போல அது தன் நிலையில் மிக எச்சரிக்கையாகவும், சுற்ருடலில் மிக விழிப்புள்ளதாயும் நின்று கொண்டிருந்தது. இருந்தும் அதன் கண்களில் ஏனோ ஒருவித ஏக்கம் மிக விசாலமாக வியாபித்திருந்தது. அது ஒரு மெலிந்த காகம். எல்லாக் காகங்களும் எங்கெல்லாமோ அவசரமாய்த் தத்தம் குடலை நிரப்ப உயிரோடு விளையாடிக்கொண்டிருக்கையில் இது மட்டும் வெகு சாதாரணமாக ரொட்டியைத்தின்று கொண்டிருந்த என் தனிமையைப் பயன்படுத்தும் நோக்கில் ஏங்கி, பார்த்துக்கொண்டிருந்தது.

நான் உண்மையில் அந்தக் காகத்திற்காய்ப்பரிதாபப்பட்டேன். சகல காகங்களாலும் புறக்கணிக்கப்பட்டதாய் நின்றுகொண்டிருந்த அந்த ஒற்றைக் காகத்தில் இயற்கையாகவே என் இரக்கம் விழுந்தது. தனித்து விட்டவற்றின் துணைக்குத் தனித்துவிட்டவை தான் பொருந்த வேண்டும். எனவே, நான் அக்காகத்தின் துணைக்குத் தயாரானேன். என் கையில் எஞ்சியிருந்த அரைவாசிக்கும் அதிகமான மீதி ரொட்டியை அக்காகத்தோடு, அக்காகத்திற்காகப்



பகிர்ந்து கொள்வதாய்ச் சங்கற்பித்துக்கொண்டேன். என் நிலையைப் புரிந்துகொண்டு என்னோடு சகஜமாக பயமற்றுப் பழகவேண்டுமென்று அக்காகத்தை நான்விரும்பினேன்

ரொட்டியில் ஒருதுண்டை எடுத்து சற்று அஜாக்கிரதையாகவே எறிந்தேன். அந்தத் துண்டு ரொட்டி எனக்கும் அந்தக் காகத்திற்கும் இடைப்பட்ட தூரத்தை இரண்டாக ஆனுல் அதற்குப் பாதகமாகப் பிரித்துக்கொண்டு விழுந்தது. அந்தக்காகம் அந்த ரொட்டியை எடுக்கப் பயப்பட்டது தெரிந்தது. எனக்குத் தர்ம சங்கடமாய் போய்விட்டது. எறியப்பட்ட துண்டு ரொட்டியை முதலில் அது தின்ன வேண்டுமென்பது என் விருப்பம். மற்றக்காகங்களைப் போல் தெத்தித்தெத்தி ஜாக்கிரதையாக வந்து அதைக் கௌவிக்கொண்டோடி தூரத்தே நின்று தின்ன வேண்டுமென நான் நியாயமாகவே பிரியப்பட்டேன் ஆனுல் அது அப்படிச் செய்யவில்லை. என் அசைந்துகொண்டிருந்த வாயையும் கையையும் எச்சரிக்கையோடு கவனித்துக்கொண்டிருந்தது என் உடலில் அசைவிருக்கும்வரை அது என்னையே இமைக்காது பார்த்துக்கொண்டு நிற்கும் போல் தெரிந்தது. நான் இறந்துவிட்ட பின்னர்தான் அது ரொட்டித்துண்டைஎடுத்துச் சாப்பிடக் காத்திருக்கிறதா? எனக்குக் கோபத்தின் தொனி இதய அடிப்பில் எழுந்தது. இருந்தும் அக்காகத்திற்கு உதவி செய்ய நான் உடலில் எந்த அசைவுமற்றவனுய் என்னை ஆக்கிக்கொண்டு பாசாங்கிற்காய் சுவரில் சாய்ந்தபடியே இறந்து விட்டவனுய் நின்றேன்.

'படபட'வென்ற சிறகுச் சப்தம் திடீரென எழுந்து அடங்கிய பின்னர் கண்களை விழித்துப்பார்த்தேன் அந்த ரொட்டித் துண்டு காகத்தின் வாயிலிருப்பது தெரிந்தது. என்னுள் சந்தோஷ நரம்புகள் சிலுப்பிவிட்டுக்கொள்ளச் சற்று முன்னர் வேறு ஒரு காகம் நிற்பது தெரிந்தது. நான் அடையாளம் கண்டு கொண்டேன். அதுதான் தன் புதுமாதிரியான ஏக்க நிலையால் என் பரிதாபத்தைச் சம்பாதிக்துக்கொண்ட அந்த மெலிந்த காகம். ஆனுல் அதன் வாயில் ரொட்டி இருக்கவில்லை; சும்மாதான் எதனையோ பறிகொடுத்த அதே பார்வை பரம்பநின்று கொண்டிருந்தது. ஆகவே ரொட்டித்துண்டை எடுத்தது புதுக்காகம். என் இரங்கலைப் பெற்றுவிட்ட காகத்தில் எனக்கு எரிச்சலும் பாவமும் எழுந்தன. 'அசட்டுக்காகம்' என்றுசொல்லிக்கொண்டேன் புதுக்காகம் அந்த ரொட்டித் துண்டை தின்று முடிக்குமுன் நான் அவசரப்பட்டு இரண்டாம் துண்டையும் உடைத்து இந்த முறை கொஞ்சம் கவனமாகவே என் காகத்தின் அருகேயே விழுமாறு போட்டேன். ரொட்டித் துண்டு பூமியில் விழுமுன் 'டப்' பென்று அதனைச் சொண்டுகளில் முதற் துண்டு விழுந்து விடாமலேயே இரண்டாம் காகம்பிடித்துக்கொண்டது. என் காகத்தின் இயலாமையில் எனக்கு அதிருப்தியும் மற்றக்காகத்தின் சாமர்த்தியதில் வியப்பும் ஏற்பட்டது. அதன் சாமர்த்தியை நான் மெச்சிக்கொள்ளவில்லை.பேராசைக்காரர்களின் வெற்றியை ரசிக்கவோ திருடர்களின் திறமையைத் தட்டிக்கொடுக்

கவோ என்ஞல் முடியக் கூடாது என்று நான் விரும்பினேன். அவர்களை அதற்காகச் சபித்தேன்.

நான், என் காகத்தின் அசட்டுத்தனத்தில் மனம்கசிந்தேன். அதன் நிராயுத நிலைக்கு இளகினேன். எதேச்சையான ஒரு சிறு காரணத்திற்காக எனக்கு அந்தக் காகத்தில் ஏற்பட்ட பிடிப்பைப்போலவே, அதன் சோர்ந்த நிலைக்கு வருத்தப்படும் என் மனே நிலையும் எனக்கு விசித்திரமாகத்தான் இருந்தது. பிடிப்பும் வெறுப்பும் இப்படி எதேச்சையானவைதான். பிடிப்பிற்கும், வெறுப்பிற்கும், அதாவது எதேச்சையானஉணர்வுகளின் நிலைப்பிற்காக மனிதனிடம் எவ்வளவு கசப்பு; எத்தனை போராட்டங்கள்; எப்படி ரகளைகள். எனக்கும், என்னினத்திற்கும் நானே ஒரு சிறிய அளவில் ஒரு பெரிய உதாரணமாக எனக்குள் நிற்கிறேன்.

மூன்ரும் காகமொன்று இங்கு நோக்கி வந்துகொண்டிருப்பதை நான் தற்செயலாகக்காண நேரிட்டது. நான் என் காகத்திற்காய் என்னை மேலும் அலட்டிக்கொண்டு உசாரானேன் அவசர அவசரமாய் மூன்ரும் துண்டை உடைத்து இரண்டாம் காகத்திற்கு ரொட்டியை வேறு ஒரு திசையில் எறிவதாய்ப் போக்குக்காட்டி அதை ஏமாற்றி வேறு ஒரு இடத்திற்கு நகர்த்திவிட்டு உடனே என் காகத்தின் அருகில் அதனைப்போட்டேன். இந்த முறை அந்தத் துண்டு என் காகத்தின் காலடிக்கு அருகிலேயே விழுந்தது. அது விளைவுகளை யோசித்துக்கொண்டு நிற்பதாய் சற்றுநேரம் நிதானித்து விட்டு என் அசைவுகளைப்படிக்க சாவகாசமாய் ஒருமுறை என்னையும் பார்த்து விட்டு அதன்பின்னர் அந்தத் துண்டு ரொட்டியைக் கௌவ முயன்றது. அதற்குள் எப்படியோ இரண்டாம் காகம் முந்திக் கொத்திக்கொண்டு மிக அலட்டிக் கொள்ளாமல் என்னைப்பார்த்தது. அதற்கு, நான் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் அனைத்தும் மெலிந்த காகத்தின் மேல் எனக்கு அன்பும் ஈடுபாடும் என்பவை காரணமாக என்று புரிந்து விட்டதுபோலிருந்தது. நிலைமை இப்படி ஒரு புதுக்கோணத்தில் ஏற்படுவதும் உண்டு. நமது அன்பிற்குப்பாத்திரமானவர்கள் தாம் இன்னொரின் அன்பிற்குப் பாத்திரமாகி இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளுமுன்னர், அவர்களுக்கு வேண்டாத நமக்கும் ஆகாதவர்கள்

## கௌரவம்

நிலைக் கண்ணுடிக்குள் மீண்டும் தன்னைப் பார்த்துக்கொண்டான். திருப்தி.

"உனக்குள் உன்னைப் பார்த்துத் திருப்தி அடைவதில் இத்தனை ஆர்வம் காட்டுகிருயே. நீ சாமான்ய மானவனில்லையா" — கண்ணுடி—

கண்ணுடி மறையத் திரையால் மூடினுன். "ஆம், நான் சாமான்ய மானவன்தான்" — அவன் எழுத்தாளன் உருவகித்த 'அகௌரவம்' கண்ணுடிகளுக்குப் புரியாது.

—வேதா.

அதனை மிக இலகுவாக அறிந்துகொள்வதைப்போல.

அதன் பார்வையில் பொதிந்திருந்த அனர்த்தக் கேலியும், அலட்சியமிடுக்கும் எனக்கு ஆக்ரோஷத்தை ஏற்படுத்தின. அதனளவில் நான் தோற்றவன் என்று அதுகருதி என்னை அவமதிப்பில் பார்த்ததில் எனக்குப் பெரிதாக ஒன்றுமில்லை. ஆனால் அதன் பேராசை பிடித்த மனோவலிமையை நான் மனமார வெறுத்தேன். அந்தக் கொழுத்த காகம் நாசமாய்ப் போகச்சபித்தேன் என் காகம் போன்றவை, என் காகம் போன்றவையாக இப்படியான தன்நலக் காகங்களோ காரணமென்பதில் நான் இப்படியான காகங்கள், இவை போன்றவை அனைத்தையும் ஒரே மூச்சில் மிக வலுவற்றன வாய் ஆக்கிவிடும் தத்துவம் நம்மிடம் இல்லாமற் போயிற்றே என ஏங்கினேன். அந்தப் பேராசைக் காகம் மிக நிதானமாய்ப் பக்கத்திலிருந்த 'நறிவிலி'யில் ஏறிச்சுகமாகக் குந்திக்கொண்டு ரொட்டித் துண்டுகளைக் காலுக்கடியில் லாவகமாகப் பிடித்துக் கொண்டு வித்தியாசமாய் இருமுறை கரைந்துவிட்டு ரொட்டியைச் சுவைக்கத் தொடங்கிற்று.


இதற்குள், காகங்களாய் பதினைந்து இருபதும், இரு கோழிகளும் கூடி விட்டன. இதுதான் அந்தப் பேராசைக் காகத்தின் 'குறி' போலும், என் காகத்தைத் தனிமையில் விட விரும்பாததிலும், தன்னால் இனி மேலதிகமாக ஒன்றையும் பெறமுடியாது என்பதிலும் அது கரைந்து மற்றக் காகங்களை கூட்டிவிட்டது 'காக்கை கரவா கரந் துண்ணும்' என்பது இதுதானா? இருக்கமுடியாது. தன் நலிந்த சகோதரக் காகத்திற்கு ஒரு துண்டையும் விடாமல் தானே பறித்துக்கொண்ட அந்தக் காகமா கரந்துண்ண நினைக்கும். என் காகத்தில் பொறுமை கொண்டுதான் அது அப்படிச் செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது சாப்பிட நிற்கும் பொழுதே மற்றக் காகங்களையும் அழைக்கக் கரைந்திருக்கலாமே. மட்டுமல்லாமல் காகம் உணவைக் கண்டால் கரைவது தனியாக அகப்பட்டுக்கொள்வோமோ என்ற பயத்தில் தானேயொழிய ஒன்றும் பெரிய காகத்தன்மையினாலல்ல. இனி இப்படித்தான் நான் நம்புவேன். பழமொழி பழையது என்பதற்காக ஏற்றுக்கொள்ள நான் தயாரில்லை, புது மொழியும் உண்மையற்றிருந்தால்ஏற்றுக் கொள்ள நான் எப்படித் தயாரில்லையோ அதுபோல.

கடைசி வரையில் என் காகத்தை ஒரு துண்டு ரொட்டியாவது பெறவைப்பது எனத்தீர்மானித்து நான் தின்பதை முற்றாக நிறுத்திக் கொண்டேன். பலவகைகளில் முயன்று அதிகமான துண்டுகளை என் காகத்திற்கு அருகில் விழ எறிந்தேன் அது ஒரு சிறு முயற்சி செய்திருந்தாலாவது பல துண்டுகளைப் பெற்றிருக்கும். ஆனால் அதுவோ எல்லாக் காகங்கட்கும் மிகப் பின்னால் நின்றுகொண்டிருந்தாலும் அதன் உதவிக்கும் துணைக்கும் வந்த என்னை தன் உயிரைக்குடிக்கப்போகும் எமனாக அறிந்து கொண்டது போலவும், தன் பசியை ஒரு துண்டு ரொட்டியிலாவது போக்கிவிட வேண்டுமென்று ஆசைகொண்டது போலவும்

நின்றிருந்தது. அதற்கு மட்டும் ஏன் அவ்வளவு பயமென்று எனக்குப் புரியவில்லே. ஒரு வேளே நான் பரிவு காட்டியதுதான் அது பயரக் காரணமோ. ஆனல், நான் அப்படி நினேக்கவில்லே. அதன் ஆத்மா உள்ளூர அதற்கு ஏதாவது எச்சரிக்கை விடுத்திருக்குமோ? ஆம், இல்லே யென்பதுபற்றி எனக்கு நிச்சயமில்லே.

என் கையிலிருந்த ரொட்டி சிறிதாகிச் சிறிதானதைக் கண்டு என் மனம் சஞ்சலப்பட்டது. எங்கே, என் காகத்திற்கு ஒரு துண்டுரொட்டியாவதுகிடைக்காமற்போய் விடுமோ எனப் பயந்து வேத

## பாரீஸிலே பைந்தமிழ்



மூன்ருவது அனேத்து உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பாரீஸில் நடைபெற்றது யாவரும் அறிந்ததே. இம் மாநாட்டில் வாசிப்பதற்கு, பொறுக்கியெடுத்த சில கட்டுரைகளே தெரிவு செய்யப்பட்டன. அப்படிப் பொறுக்கியெடுத்த கட்டுரைகளுள் பண்டிதர் வித்துவான் வி. சீ. கந்தையா (B.O.L.) அவர்களின் கட்டுரையும் ஒன்று. இதில் சிறப்பு என்னவென்ருல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலும் கலந்துகொண்டவர் இவர் என்பதுதான்.

தமிழே தனது மூச்சாகக்கொண்டு பணிபுரிந்து வரும் பண்டிதர் அவர்கள், "மட்டக்களப்புத் தமிழகம்", "கண்ணகி வழக்குரை" ஆகிய இரு சிறந்த தமிழாராய்ச்சி நூல்களின் ஆசிரியர் என்பது பலருக்குத் தெரியும். ஆனல் இவர் எழுதிய "பாஞ்சாலி சபதம்" என்னும் நூல் லண்டன் பல்கலேக் கழகத்தில் பாடப்புத்தகமாக அமைந்துள்ளது என்பது பலருக்குத் தெரிந்திருக்காது.

அறிவும், அடக்கமும், ஒருங்கே அமைந்த அமைதியான சுபாவத்திஞல், தனது சாதனேகள் பலவற்றை மறைத்துக்கொண்டிருக்கும் பண்டிதர் அவர்கள், தொடர்ந்து பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

குறிப்பு:— பிரயாண அனுமதி கிடைக்காத காரணத்தால் குறித்த ஆராய்ச்சிக் கட்டுரை பாரீஸ் மாநாட்டில் வாசிக்கப்படவில்லே எனத் தெரியவருகிறது. இக்கட்டுரை ''மலர்'' சஞ்சிகையில் பிரசுரமாகும்.

—"மணி"

லைப்பட்டது. இருந்தாலும் அதற்கு உதவும் முயற்சியையும் நம்பிக்கையையும் நான் என்னுள் தளரவிடவில்லை. கடைசித்துண்டு ரொட்டி கையில் எஞ்சியதும் அதனையும் என் காகத்தையும் மாறி மாறிப் பார்த்தேன். இந்தத் துண்டு ரொட்டியாவது அதன் வாயுள் இறங்கி, வயிற்றுள் சீரணமாக ஏலவே விதிக்கப் பட்டிருக்க வேண்டுமென்று நான் மிகவும் விரும்பினேன். ஒரு திட்டத்துடன் சில கணங்கள் காத்திருந்தேன் இதற்குள் அதிகமாக எல்லாக் காகங்களும் போய்விட்டிருந்தன. சற்றுப் பின்னர் என் காகம் மட்டுமே அங்கு நின்று கொண்டிருந்தது. நான் இந்தச் சந்தர்ப்பத்தைப்பயன்பட வைக்க கடைசித்துண்டு ரொட்டியை அக்காகத்தருகே போட்டேன். ரொட்டித் துண்டை 'சடக்' கென்று கௌவுவதை விட்டு அது என்னை மிகச்சோர்ந்து நொந்து போய்ப் பார்த்தது. பின்னர் அதன் கண்களில் ஒரு கனிவு தெரிந்தது. நன்றியுணர்விற்குரிய கனிவாய் அது இருக்கலாம். ஆனால் நான் அது அப்படிப் பார்த்து நேரத்தைக் கடத்துவதை விரும்பவில்லை. அது ஒரேயடியாய் அந்த ரொட்டிதுண்டைச் சாப்பிட்டுவிட வேண்டுமென மிக ஆவலானேன்.

இதய பூர்வமாக விரும்பி மனமார முயன்றால் நமது முயற்சி நிரப்பமாகாது விடுவதில்லை என்பார்கள். நான் இதயபூர்வமாக விரும்பி மனமார முயன்றதற்காகவோ என்னவோ அது நிறைவேறவில்லை. 'லபக்'கென்று வேறு ஒரு காகம் அந்தத் துண்டையும் எடுத்துக்கொண்டு பறந்தது. எனது மனம் இடிந்து குமைந்தது. அதனில் இரக்கப் பட்டதற்காகவே என் மன நிலையைச் சங்கடப்படுத்தி விட்ட என் காகத்தில் எனக்கு சொல்லொணு எரிச்சல் ஏற்பட்டது. என் முயற்சிகளும் பாடுகளும் விரயமானதில் அக்காகத்தில் எனக்கிருந்த இரக்க உணர்வு வேர்பெயர நீக்கப்பட கோபமே மிகப் பெரிதாய் உருவாகி உச்ச நிலையை அடைந்தது அதிருப்தி விஷமாய்ப் பரந்தது. இப்படியான பலஹீனக்காகம் வாழ்வதற்கு லாயக்கற்றது என்றே எனக்குப் பட்டது. அது இந்த உலகத்தின் இம்சைக்கு ஈடுகொடுத்து வாழத் தகுதியற்றிருப்பதாய் நான் முடிவெடுத்தேன் என் பரிதாபம் அதன்மேல் விழாதிருந்திருக்குமாஞல் அதனை அதன் போக்கில் அநுமதித்திருப்பேனென்பது எனக்குத் தெரியும் இப்பொழுது என் நிலை அதுவல்ல. எனவே நான் கசந்ததில் வெகுண்டேன். உள்ளே போய் ஒரு துண்டுத்தடியை எடுத்துக்கொண்டுவந்து அதைப் பின்னுல் மறைத்தபடி நின்றிருந்தேன் காகம் சற்று சற்றுய் அயர்வது தெரிந்தது.

நான் இனி அதைநோக்கி எறியலாம். திடீரென மனம் பிடியைத் தளர்த்தியது. இதயம் எதையோ எச்சரித்தது. வழக்கத்திற்கு விரோதமாக என் குறி தவறி எறியப்படும் காகத்திலேயே பட்டுவிட்டால்......... 'சவம்.' அழிந்து தொலையட்டும்! என்று வாயாரச் சொல்லிக் கொண்டேன். ஆனுல் மனம் மட்டும் அப்படி நடந்து விடக்கூடாதென்று பிரார்த்தித்தது. ஆனுல் நான் எறிந்து தானுவது என்று தீர்த்துக்கொண்டேன். எறிவது பட்டாலும் படாவிட்டாலும் 'எறிதல்' நிகழ்ந்து

தானுகவேண்டும். எறிபடுவது என் கையிலில்லை. எறிவது என் கையில் எறிந்தால்தான் அந்த மெலிந்த காகத்திற் காய் என்னுள் வளர்ந்திருக் கும் கோபம் ஈற்ருவது தணி யும். என் உணர்வுகளை என் னுள் அடைத்துப் பாதுகாக்க என்னுல் முடியாது. முழுப் பூசணிக்காயை ஓர் அகப்பைச் சோற்றில் மறைப்பது போல அல்ல இது. நெருப்புப்பொறி யைப் பஞ்சின் பக்கத்தில் சேர்த்து வைப்பதுபோல. என் உணர்வுகள் வெளிப் பட்டு எந்த ஒரு வடிவையா வது பெற்று என்னை விட்டு அகல நான் நிச்சயம் எனக்கு உதவிசெய்துதானுகவேண்டும் அவற்றை நிர்த்தாட்சண்யமாக எந்தஒரு போலிக் காரணத்திற்கும் மறுத்து விடுவதில் என் மனத்தைக் குப்பைகூளங்களின் மடுவாக என்னுல் ஆக்க மூடியாது. எனவே நான் எங்காவது அந்தத்தடியைஎறிந்து என் உணர்வை ஒரு வழியில் கைகொடுத்து உதவ வேண்டும். அரசியல் எதிரியை அவமதிப்பதற்கு அவனுக்குக் கொடும்பாவி கட்டிச் சித்திரவதை செய்வதுபோல. உடலளவில் தொடர்பு கொள்ள முடியாமற் போகும் ஓர் இயலாமைக்காக மனத்தளவில் வேண்டியவரோடு சல்லாபம் புரிந்து மன இச்சைக்கு உதவி செய்வதுபோல. மனிதனில் பாசம் வைக்க மனமில்லாத போது பிராணிகள் வளர்த்து அநுசரிப்பதுபோல.

நான் மிகவும் நிதானித்து என் காகம் பறப்பதற்கு அவகாசம் கொடுக்குமளவில் நின்று தடியை வீசினேன். மனத்தின எங்கோ ஒரு சதுக்கமான மூலையில் ஆரவாரமின்றி உதித்த என் எதிர் பார்ப்புதான் நடந்தது. தலையிலடிபட்டுக் காகம்கிறுகிறுத்து விழுந்தது. எனது இருதயம் வெளியேற்றிய வியாகுலப்பெருமூச்சில் காகத்திற்கு அடிபடுவதை நான் கொஞ்சமும் விரும்பியிருக்கவில்லையென்றே தோணிற்று. என் கண்களில் நீர் கசிந்தது. விசித்து அழ எனக்குவராது. விக்கலையும் விழுங்கி என் அழுகையையும் என்னுள்ளேயே ஆக்குவதுதான் எனக்குப்பழக்கம் ஏனே' நான் அழுதேன். கீழேவிழுந்து துடித்துக்கொண்டிருந்த காகத்தைக்கொண்டு வந்து கோப்பையிலிருந்த தண்ணீரை அதில் தெளித்து மூடுவதற்கு ஏதும் அகப்படாததில் நானே நின்று என் சீலையால் மூடினேன். இப்படிச் செய்வது எதற்காக என்று எனக்குத் தெரியாது. ஆனுல் இப்படிச் செய்வதைப் பல முறை கண்டிருக்கிறேன். அதனுல் தான் நான் இயல்பூக்கத்தால் தொழிற்படுவது போல சற்றும் யோசியாமல் தொழிற்பட்டேன் அதிலுள்ள உண்மைகள் என்னவென்று உண்மைகள் என்னவென்று உண்மையில் எனக்குத் தெரியாவிட்டாலும் அதில் உண்மைகளே இல்லை என்று சொல்ல எனக்குத் தெம்புதர வேறு மாருன உண்மைகள் என்னிடமில்லை. தன் வருத்தம் சுகமானுல் சரி என்பதற்காக எந்த விதமான அர்த்தங்களுமற்ற மூட நம்பிக்கைகளையும் விசுவாசிக்கும் ஒரு சராசரி மனிதனைய் நானும் என் பரிதாபத்தைப் பெற்றுவிட்ட காகம் மயக்கம்தெளிந்து பழையபடி ஆகவேண்டுமென்பதற்காய் சும்மாவே செயல்பட்டேன்.ஒரு வேளை உண்மைகள் ஏதாவது இருந்துவிட்டால் என்ற பயம் எழுந்ததற்காகவும்செய்தேன் நான் அதிக நேரம் அந்தக்

காகத்தை என்னுள் வைத்து நின்றுவிட்டதாகத் தெரிந்ததும் அதை வெளிப்படுத்தக் கவனமாக விலகினேன். காகம் விறைத்துக் கிடந்தது. சரிதான். அதன் உயிர் என்னுலேயே அறுதியாக்கப்பட விதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததும் நான் மிகவும் சஞ்சலமானேன் எல்லா அசைவுகளையும், தரிப்புகளையும் போல் காகம் இறந்ததும் ஏற்கனவே பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்படும் எண்ணம் கர்த்தரின் சிந்தையில் தெரிந்த அன்றே — தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்ருக இருக்குமானுல் அதனை மாற்றக் காகத்தைப்போலவே ஆனுல் காகத்திலும் சித்ரவதை கூடிய படைப்பில் ஒருவனுன என்னுல் என்ன செய்துவிடமுடியும் நான் அழுந்த வருந்தினேன். நான் வருந்தியும் ஆகவேண்டும் என்பதும் அந்தத் 'தெளிவான புத்தகத்தில்' எங்கோ ஒரு குறிப்பில் உள்ள வாசகம்தானு? அதனுல்தான் அந்தக் காகம் அப்படி நின்றதா? அதன் ஆத்ம துடிப்பை, எச்சரிக்கையை, இறுதி மூச்சுகளைப் புரிந்தும், எமன் உருவில் என்னை அறிந்துகொண்டும் தனது ஊழியை நீட்டிக்கொள்ளச் சக்தியற்று சற்று முன்னுல் என் முன்னே நின்ற இக்காகத்தின் நிலையை என்னுல் அட்சரம் ஒன்றுகூட விடாமல் இன்னும் பார்க்க முடிந்தது. நான் அதைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு வந்து அமர்ந்தேன்.

என் மனுே நிலை விகாரப்பட்டு வெறிகொள்வது எனக்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. நான் என் பிரச்னைகட்கு முடிவுகளை எடுக்காத ஒரு மதநிலை இது. எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. விவாத மேடைகளும், ரணகளங்களும் பிரளயங்களும் மனத்தைத் தம்போக்கில் நிர்ணயிக்கத் தலைப்பட்டன. நெஞ்சு, கதிரவன்போல் அனந்த எண்ணக் கதிர்களுக்கு ஆரை தந்த மையமாயிற்று. நான் தலையைப் பாங்கு பாவனை யறியாதவன்போல் அழுத்தமாய்ச் சீய்த்துக் கொண்டேன்.

அது என் தடியினுல் இறக்குமென்று நான் தெளிவாக எதிர்பார்த்தே இருக்கவேண்டும். என் மன உணர்வுகட்கு உதவி செய்வதை இன்னும் அபாயமற்ற முறையில் முயன்றிருக்கவேண்டும். அல்லாமல் போயிருந்த வரையில் நான் அறிவற்றவன் பச்சாத்தாபமற்றவன். என் தவறு எனக்குப் புரிந்தால் சிறப்பு. அது 'பல


## "மலர்"
### சந்தா விபரம்

ஒருவருடம் ரூ. 6-00.
தனிப்பிரதி சதம் -/50.

### விளம்பர விகிதம்

பின்புற அட்டை ரூ. 200/-
உட்புற அட்டை ரூ. 150/-
முழுப் பக்கம் ரூ. 125/-

விபரங்களுக்கு
**'மலர்'**
இல. 21, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

ஹீனமானது' என்று நான் அடக்கிக்கொள்ள முடியாது. ஆத்திரப்பட்டது எங்ஙனம் முறையாகும். பலஹீனர்கள் இருக்கக்கூடாது என்பதுதான் எனக்குப்பிடித்த கொள்கையா? எனவேதான் நான் அதன்மேல் ஆத்திரப்பட்டேனு? இல்லை. ஒருபோதும் அப்படி இல்லை. எனக்கு என் ஆத்திரத்திலுள்ள வேறுபாடும் அதன் அடியில் நான் உயிர்களிடத்தில் கொண்டிருந்த கசிவின் இரகசியமும் புரிந்தது. வேண்டுமானுல் பலஹீனர்கள் உலகில் நிறைய இருக்கட்டும். அதில் எனக்குப் பிரச்னே அதிகமில்லை. ஆனுல் எனக்கு வேண்டியவர்கள் என் உதவி நேரடியாக கிட்டிவர்கள் எவரும் பலவீனர்களாய் இருப்பதில் எனக்கு எள்ளளவும் பிடித்தமில்லை.

காகம் அதி ஜாக்கிரதையாக அதிக விழிப்புணர்ச்சியுள்ளதாயும் இருந்தது அதன் பலவீனமா?... ... ..அதுதான் நிஜப்பலம் ........இருக்கலாம். சாதாரண ஜாக்கிரதையுணர்வுகொண்ட கூட்டத்தில் ஜாக்கிரதையற்று இருப்பது எப்படி ஒரு குறையோ, பலஹீனமோ அது போலத்தான் அதி ஜாக்கிரதையாயிருப்பதும். சராசரியான அறிவு கொண்ட மனித சமுதாயத்தில் அறிவற்றிருப்பதும் அதிக அறிவு கொண்டிருப்பதும் குறையாய்த் தென்படுவது போல. அறிவற்ற தன்மையில் தன்னிச்சைப்படி நடந்துகொண்டால் 'பைத்தியம்' என்பார்கள். அறிவு மிக மிகைத்த தன்மையில் சுயேச்சையாய் நடந்துகொண்டால் 'கிறுக்கு' என்பார்கள். அதைபோலத்தான் இதுவும். எடுபடாத உண்மை வழக்கத்திலுள்ள பொய்க்குச் சேவகம் செய்வதைம்போல. நிலத்தின் கீழ் வளரும் வேர் தேவையையொட்டி தண்டுப்பகுதியொன்றில் வளர்ந்தால் 'இடம் மாறிப் பிறந்த வேர்' என்று வித்தியாசப்படுத்தப் படுவதைப்போல. தொகைதான் பலம். தொகைதான் வழக்கத்தை நிர்ணயிக்கும். ஆகவே அக்காகம் அழிந்தது சரிதான்!

நான் வாழ்வதைக் கணிதச் சமன்பாடு ஒன்று என்று நினைக்கவில்லை. நான் காகத்தைக் கொலேசெய்ததுசரியா? கொலை செய்வது சரியா? ஐந்தும் ஐந்தும் பத்து என்பதைப் போல சரியா?அல்லது ஒன்பது என்பது பிழைஎன்று சொல்வதைப்போ லுள்ள சரியா? நாம் நம்மை அறியாது நம்முள் ஏற்பட்டிருக்கும் சில வகையான ரசனைகளைக் கொண்டிருக்கு மட்டும், மனவிகாரங்களைப் பெற்றிருக்கு மட்டும், காரண மற்று எழும்பும் உணர்வுகளின் பக்கம் சாய்ந்து கொடுப்பது இன்னும் இவற்றிற்குச் சமமான பலவீனங்களை அடியோடு கெல்லி அகற்றுமட்டும் வாழ்வது கடைசிமட்டும் ஒரு கணிதச் சமன்பாட்டைப் போன்றதல்ல. எனவே சரியென்றும் பிழையென்றும் ஒன்றுமே கிடையாது. என் காகம் என் எறிக்கு இலக்கானது துரதிர்ஷ்ட வசமான ஒரு கை பிழைபாடு. ஆனுல் எறியவேண்டுமென எழுந்த எண்ணம்? அது திட்டமிடப்பட்டது. சில்லறையான உணர்வின் வழிப்பட்டதில் கேவலப்பட்டதாய் மனம் என்னை நடுச்சந்தியில் நிர்வாணமாய் நிறுத்திய அருசையுணர்வைத் தந்தது. காகம் கெட்டழிய வேண்டுமென்று விரும்பி நான் இந்தக்காரியத்தைச் செய்யவில்லை. எனது நோக்கு நல்லெண்ண வாய்ப்

பட்டதற்ற தெனினும் தீய எண்ணத்தின்பாற்பட்டதல்ல. சோரம்போன இந்த உலகில் நிறைய நன்மை தரும் உண்மைகளை அறிந்திருந்தும் தனித்து விடப்பட்டதினுல் அவஸ்தையுறுவதைவிட ஒரேயடியாய்ச் செத்துத் தொலைப்பது மேல்தான். ஆகவே மிக விழிப்புணர்வாயிருந்ததற்காய் காகம் அழிந்ததுமுறை.

நான் அக்காகத்தை அநியாயமாக, அது வாழ்வதற்கு வெறுக்கிறதா என்று அறியாதும்கூட இப்படி ஒரு நேரத்தில் இறக்க விட்டது தர்மம் தானு? ஏன் மரண அவஸ்தையில் துடித்த ஆட்டினை ஏரேயடியாய்க் கொன்றுவிடச் சொன்ன மகாத்மாவும்அதன் வலியைத் தாங்கமுடியாத அதன் பலவீனத்தை உணர்ந்தும், பின் தன் மனச்சாந்திக்காயும் தானே அப்படிச் சொன்னர். நானும் ஏறக்குறைய அதைத்தானே செய்யும்படி ஆயிற்று'

இருந்தும், நான் காகம் செத்ததை வருந்தினேன். என் மனம் ஒன்ற நினைத்து மிகப்பலமாக வருந்திற்று, நாளை, ஒருவேளை என் காகமும் மற்றவைகளைப்போல் வாழ்க்கையோடு போராடும்படிச் சந்தர்ப்பம் கிடைத்துமாற இருக்குமானுல்.........? என்னை இந்தக்கேள்விக்கு எப்படிச் சமாதானப் படுத்துவது என்றே தெரியவில்லை. ஒரு காரணத்தைக்காட்டி என்னை சாந்திப்படுத்த துடித்தேன் ..

நாளையே எந்தவித நிச்சயமும் அற்றபோது. நாளை அது திருந்துவது மட்டும் சந்தேகமற்ற நிச்சயமானதாய் விடுமா? 'இருக்கலாம்' என்றே எனக்குப்பட்டது. எதற்கும், எனக்காகவேண்டி 'இல்லை' என்றே சொல்லிக் கொண்டேன். ★

## 'பாஷன்' வளர்ச்சி

திருமண வைபவம் ஒன்றுக்குச் செல்வதற்காகக் கணவனும் மனைவியும் ட்ரெஸ் செய்து கொள்ளத் தொடங்கினுர்கள். கணவன், கோட், சூட், டை அணிந்து டிப்டொப்பாக வெளியே வந்து காத்திருந்தார். நீண்ட நேரத்திற்குப்பிறகு மனைவி அலங்காரத்தை முடித்துக்கொண்டு வெளியே வந்து "சரி போகலாம்" என்றுள். ''கொஞ்சம் பொறு'' என்று கூறிய கணவன், தன்னுடைய டை, கோட், சேட், ட்ரவுசர் எல்லாவற்றையும் அவசர அவசரமாகக் கழற்றி எறிந்துவிட்டு உள் பானியனுடன் மட்டும் காட்சி தந்தார். ஒழுங்காக வாரிவிட்டிருந்த தலையையும் குழப்பிவிட்டார். ''சரி, போகலாம். இப்போதுதான் உன்னுடைய ட்ரெஸ்ஸுக்கு என்னுடைய ட்ரெஸ் 'மாட்ச்' ஆகிறது!'' என்ருர். மனைவி திகைத்து நின்ருள்.

# "ஏகினேன் வீட்டைநோக்கி"

## —ப. கோபாலன்.—

★

'இலக்கியம் வாழவேண்டும் எந்தமிழ் ஓங்கவேண்டும்
இலக்கினைஇ யம்பவேண்டும் ஏற்றமாயி யம்பவேண்டும்
வழக்கமாய் ஈழநாட்டில் வாழ்ந்திடு மனைவருக்காய்
இலக்கியம் வாழச்செய்து இசையுடன் வாழ்வீரிங்கு'

என்றொரு பெருமுழக்கம் எங்கணு மெதிரொலிகள்
சென்றன சென்றனவே செவிகளு மினித்தனகாண்
நன்றென நானுங்கூறி நாடினே னவைநோக்கி
கன்றது தாயைக்கண்டு கணத்தினி லோடுமாப்போல்

கூடியம க்கள்முன்னே குழலென மொழிந்துநின்றார்
வாடியவா ட்டந்தன்னை வகையுடன் போக்குமாப்போல்
சாடினார் 'சாக்கடைச் சரக்குகள் சாகவேண்டும்
கூடியே ஈழநாட்டு இலக்கியம் வாழவேண்டும்'

திண்ணிய உள்ளமிக்கோர் தேர்ந்தெடுத் துரைத்தாரென்று
உண்ணியே நானு(ம்)நின்றேன் உருவத்தாற் பெரியதான
அன்னவன் தோற்றந்தன்னை ஆவலாய் நோக்கிநின்றேன்
இன்னமும் பொழிவானென்றே ஏக்கமாய்க் காத்துநின்றேன்

கூட்டமும் முடிந்தபோது கூடினோர் கலைந்தாரங்கு
வாட்டத்தைப் போக்கிநிற்க வளர்தமிழ் வாழ்ந்துநிற்க
காட்டினோர்(உ) ரையைக்கேட்டுக் கண்ணிமை யாதுநின்றேன்
கூட்டத்தைக் கூட்டினோரும் குறைதனைக் களைவாரென்று

கையது கனத்திடவே காரியம் எண்ண லுற்றேன்
ஐயனை நோக்கியோடி 'எடுப்பீரா' என்றுநின்றேன்
தையினிற் தோன்றியிங்கு தகவுடன் பரிமளிக்கும்
கையினில் 'மலரெ''டுத்துக் காட்டியே கேட்டுநின்றேன்

பேசிய பெரியவர்தாம் ''பின்னர்வா'' வென்றுசொன்னார்
மாசிலாக் கருத்தினையே மக்களின் முன்னேவைத்தோர்
கூசியே சென்றுவிட்டார் குழுமிய மக்கள்பல்லோர்
'வாசியோ' மென்றுசொன்னார் வதனமும் வாடலானேன்

சொன்னவர் சுவைபடச் சொல்லிட வாய்ப்பளித்தோர்
எண்ணத்தைக் கேட்டுநின்றோர் எவருமே விரும்பவில்லை
பின்னுமேன் பெயர்பெறவா பெரியதாய்ச் சொக்கிநின்றார்
எண்ணமோ பலவேயாக ஏகினேன் வீட்டைநோக்கி.

## 2. எதிரொலி




"திமிலைத்துமிலன்"

(கறுப்பன் மீனாவின் காலில் பிடித்திருந்த அட்டையை விடுவிக்க முயல்கிறான்).

மீனா: ஆ! ஐயோ! நோவுதுமாமா!

கறுப்: அட்டை காலைத் தொளைச்சிப் பூந்திடிச்சே! இவ்வளவு நேரமும் ஏன் வச்சிருந்தே? இரு போயிலைப் பாணியைப் பிளிஞ்சுடுறன்...ம்; விழுந்திடிச்சா? எழுந்

திரு பாத்தியா புள்ள; அட்ட பிடிச்சுதுண்ணுப் பிடி தான். கறுப்பன் நெனேச்சானே ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சிக்கோ.

மீனு: (சிரித்து) மாமா! மீனுச்சியோட கைருசி அறியல்ல; என்ன மாமா? வீராயிகிட்டே கேட்டுப்பாரு. தூ! நீயும் ஒரு ஆம்பிளேயா? வழியைவிடு குளிக்கப் போவணும்.

கறுப்: மீனுச்சி! என்னோட கோவமா?

மீனு: இல்ல கொஞ்சுறன்.

கறுப்: நீ கோவிச்சாலும் உன்மொவத்தில குளிருதான், வீசுது.

மீனு: என்ன உச்சில ஐஸ் வச்சமாதிரியா?


கறுப்: ஆமா; ஆமா; இம்புட்டு நேரமும் நான் பேசினது போலி நடிப்பு; வீராயிக்காக.

பாவம்; அவளுக்கு அப்படி நீ அடிக்கலாமா? கன்ன மெல்லாம் வீங்கிப்போய்க் கிடக்கு.

மீனு: ஒன்ட தங்கச்சிக்கு, கொழுந்தெடுக்க வரக்க வாய்க் கொரு மூடிபோட்டனுப்பு. அப்பத்தான் கன்னம் வீங்காது.

கறுப்:
வானஞ் சிவக்குது வாயுஞ் சிரிக்குது
மஞ்சள் மணக்குது மீனுச்சி
நானும் சுருக்கிட நீயும் நடக்கிறே
நாழியினியில்ல மீனுச்சி.

மீனு:
காகம் வெளுக்குமோ காடை கதைக்குமோ?
காது புளிக்குது மாமாவே!
மோக மிருக்குதோ! மூஞ்சி நொருங்கிடும்
மூளேயிருக்குதோ? மாமாவே!



கறுப்: கோப மெதற்கடி கோல விழிச்சுடர்
குத்தி யிழுக்குது மீனுச்சி!
பாவமுனக்கென்ன நோக வருந்துதல்
பாசாங் கெதற்கடி மீனுச்சி.

மீனு: மீசை யிருக்குது கூழுங் குடிக்கணும்
வெட்க மிருக்குதோ மாமாவே
ஆசை யிழுக்குது ஆளும் சரியில்ல
ஆட்டம் பலிக்காது மாமாவே!

இந்தா பாடுமாமா. எனக்குக் கோபம் வந்துதோ... ஆமா, வழிய விடுறியா இல்லையா?

கறுப்: மீனுச்சி! எனக்குக் கோபம் வாறல்ல. வந்துதோ; அப்புறம்; ஆமா நீ ரொம்ப மிஞ்சித்தான் போறே. இண்ணைக்கு ரெண்ணுல ஒண்ணு சொல்லுறியா இல்லையா?

மீனு: சொல்லையா (அறைகிறுள்)

கறுப்: ஆ! அவ்வளவு கர்வமா ஒனக்கு? கன்னத்துலயா அடிச்சே?

மீனு: (கூச்சல்) ஆ! ஐயோ! அம்மா! ஓடிவாங்கோ. (சிரிப்பு) பயந்தாங்குள்ளி. ஓடுற ஓட்டததப் பாக்கல்ல.

செங்குத்தான பாறையிடுக்கு. அதனூடாக வீழ்ந்த நீர் கீழே பரந்துகிடக்க கருங்கல்லிலே பட்டுச் சிதறியது. பயங்கர ஓசையோடு பாய்ந்து சென்றது. அந்தக் கருங்கற் பாறையிலே ஏறி நிமிர்ந்து நின்றுள் அவள். அவளின் உச்சியிலே உறைப்பாக வீழ்ந்தது நீர். மங்கும் மாலையிலே தங்கச்சிலைபோல அவள் நின்றிருந்தாள். கண்கொள்ளாக்காட்சி எங்கும் இன்பவெள்ளம்! குளுகுளு, இன்பகரமான வேளை. அவள் செந்தூரச் செவ்விதழ்கள் நெகிழ்ந்தன. இதழ்க் கோடியிலே நெளிந்த புன்னகையோடு குழைந்தது அமுத கானம்;

மீனு: புனல் பாட இளவேய்கள் நடமாடவே
புலர்கின்ற புதுத்தென்றல் இசைமீட்டவே
வனமெங்கும் கமழ்கின்ற மலர்மீதிலே
மயல்கொண்ட களிவண்டு சுதிசேர்க்கவே

இருள்என்ற படைவீரர் தலைகாட்டினுர்
இளமாலை யெழில் கங்கை ரதமேறினுள்
சுருள்கொண்டு அலைபாயும் புனல் ஆடினுள்
தொடர்கின்ற கருமேகம் தனைச்சூடினுள்!

மலைமங்கை யவளோடு உறவாடினுள்
வளமென்ற அமுதத்தை யவளூட்டினுள்
நிமிர்கின்ற குளிர்வானி லொளிவீசியே
நிலைகொண்ட மதியத்தை முடிசூடினுள்!

புனல் பட்டுப் பளபளத்த அவளது பட்டு இதழ்கள், ஒன்றையொன்று தழுவுமுன்னரே, மலேமுகட்டிலிருந்து எழுந்தது இனிமைக் குரலொன்று. ஆடாமல் அசையாமல் அண்ணுந்து நோக்கியவாறே நின்றிருந்தாள் அவள். தங்கச் சீலேமீது வெள்ளியை உருக்கி ஊற்றுவதுபோல புனல்மங்கை அவளே முழுக்காட்டிக்கொண்டேயிருந்தாள். அந்த இனிமைக் குரலே மந்தமாருதம் சுமந்துகொண்டே வந்தது.

**ஆண் குரல்:-**

தத்துகின்ற பூம்புனலில் முத்தெடுத்து வைத்திழைத்த
வித்தகக் கலேமணக்கும் காவியம்
மத்தமத வாரணத்தின் நித்திலத்தந் தத்திழைத்த
வைத்துமதன் சித்தரித்த ஓவியம்.

பத்தரைமாற் றுற்றபொன்னிற் புட்பராகக் கற்பதித்து
புத்தகத் திருத்திவைத்த பெட்டகம்
சித்தமதி லெத்தினத்து மெற்றியெற்றி யுட்புகுந்து
புத்திகெட்டுப் போகவிட்ட புட்பகம்

— (வேறு) —

நாண மிவட்குத்தா னில்லேயோ? - மலே
மானும் சுணேயற்ற வல்லியோ? — மிக
நளினத்தோடு அரனுர்தலே தனேமேவிய
வருபைம்புனல்
நங்கையைக் கட்டியணேக்கிருள் — அவள்
பைங்குழல் தொட்டு வனேகிருள்!
பாண மெறிந்துமை பாகனேப் — பற்றிப்
பாய்ந்து சிரமதி லேறினுள் — ஒரு
பயமின்றியே சிவநர்த்தன மிடுபோதிலு
நிலேகுன்றிலள்
பச்சைக்/ குழந்தைபோ லாடுருள் — அதைப்
பார்த்து மிவள்வாயை மூடுருள்
சேனும் சிவந்தனள் வெட்கமோ? — இவள்
மானமிழந்ததில் துக்கமோ? — பகல்
திருமாதவள் ஒளி குன்றினள் பனியாய்விழத்
துளிசிந்தினள்
தேம்பியழுவது தென்றலோ? — பாவம்
பூம்பொழில் சுற்றிய அன்றிலோ?

அவள் இன்னும் கேட்டுக்கொண்டே நிற்பாளா? குறுப்பு கலந்த சுடுவார்த்தைகளே அள்ளிவீச அவளுக்குத் தெரியாதா? வார்த்தைகள் தெறித்தன! அவையும் இசையோடுசேர்ந்து நீர்வீழ்ச்சியின் பின்னணியிலே எதிரொலித்தன!

**மீனு:** ஆண்களுக் னென்னதான் வெட்கமோ?—எது துக்கமோ?
அடியன்னமே கனியேஇள மயிலேஎன
மொழிபேசுவர்
ஐயகோ அற்புதம் அற்புதம் — அவர்
செய்கையோ மந்தியின் கற்பிதம்

ஆண்டியாய் மாறினான் கோவலன் — வடிவேலன்
அழகாகிய மயில்குஞ்சரி மனையாட்டியை
யறியாமலே
அண்மினான் வள்ளியை ஆகுமோ? - இதில்
ஆண்களுக்கே தனிமோகமோ?

காண்டீபன் கட்டிய தாயிரம் — பெண்கள் ஆயிரம்
கண்ணன்பல களவாடியே பெண்ணைத்தின
முறவாடிய
காதற் கதைகாதி லெட்டுமோ? - இந்தக்
கற்பது பெண்ணுக்கு மட்டுமோ?

வண்டியிற் போகுது நாணமே! - ஆண்கள் மானமே!
மதியற்றவர் குடியிற்பண மழியப்பெண்ணைக்
கடிகின்றனர்
மார்பு நிமிர்ந்திடும் வீரரோ? — இவர்
வாழத் தெரியாத மூடரோ?

அந்த வாலிபன் அண்மையிலே தான் நின்றிருந்தான். அவளோ அவனைக் கவனித்ததாகத் தெரியவில்லை. மலை முகட்டை நோக்கியவாறே பாடிக்கொண்டிருந்தாள். இளமை மதர்ப்பூட்டிய அந்த எழிலுடலை நினைத்துக் கொண்டிருந்த நீர்வீழ்ச்சி அந்த எழிலை உச்சிக்கே உயர்த்தியது. நீண்டு தொங்கிய கருங்குழலை ஆசையோடு வருடிச்சென்ற புதுப் புனல், மதமதர்த்த அங்கங்களைப் பளபளக்கச்செய்து பார்த்து மகிழ்ந்தது.

அவள் பாட்டை நிறுத்திவிட்டாள். நெற்றியால் வழிந்த நீரைக் குழந்தைபோல உறிஞ்சி ஊதிக்கொண்டிருந்தாள். வண்டுவிழிகள் சிவந்துகிடந்தன. அவை மலையுச்சியிலே எதையே ஆவலோடு தேடின.

இமைக்கும் நேரம்; ஒரேபாய்ச்சல்! அந்த லாலிபன் அவள் கரத்தைப் பற்றினான். வேகமாக இழுத்தான். அந்த வேகத்திலே அவனது மார்பிலே வந்து தொப்பென வீழ்ந் தாள் அந்தப் பூங்கொடி.

அவள் நெருப்பானாள்! கொதித்த கோபத்தோடே நிமிர்ந்தாள்! அந்த வாலிபனின் முகத்திலே பாளர்! பளார்! என்று கனல் தெறிக்கவைத்வது அவள் தளிர்க்கரம்.

அவன் தடவுதற்குக் கையைஎடுப்பதற்கும், அவள் பர பரப்புடன் அண்ணாந்து பார்த்து ''வீல்'' என்று அவலக்குரல் எழுப்புதற்கும் சரியாயிருந்தது.

அடுத்த கணம்; ஒரு கர்ணகடூரச் சத்தம்! மலைக்காடு முழுதுமே அதிர்ந்தது! அத்தோடு அவள் போட்ட அதிபயங் கரக் கூச்சலுடன் சேர்ந்து மலைப்பாறைகளையே அதிர வைத்து எதிரொலி யெழுப்பியது.

(அடுத்த மலரில் "வீராயி எங்கே?"

விருத்தாந்த சித்திரம் – 2.

# போடிமகள் பொன்னம்மா

## அம்மாச்சி ஆறுமுகம்.

ஓமெண்றன்.........

ஒலகங் கெட்ட கேட்டுக்கு!

எனக்கிந்தக் கத காலுகள் புடிக்காது கண்டயளோ!

என்ன கண்டறியாத கத காலுகள்.........

......சொறிஞ்சிக்க நகமில்லாமக் கெடந்தத்துக்கெல்லாம், ஒள்ளுப்பம் தராதலம். வந்திற்றெண்டாப்பல ... இதுகளும் சந்தி சவையில பந்தி பாவாடையில மனிசன் மாஞ் சாதியெண்டு ஏறத்துவங்கிற்றுப்பல இந்த ஊர உண்டாக்கினவன் ஆரு? இதக் கட்டியாண்டவன் ஆரு? நெனச்சிப் பாக்குதுகளா.. ஓங்கா...... காலங்கெட்டகேட்டுக்கு! அதுகளுக்கு வந்த பவுசும் தாக்கத்தும்! ஓமெண்றன்...

வெள்ளக் காச்சட்டையும் வீடுவளவு வெள்ளாமையும் வந்திற்றெண்டாப்பல..., இதுகள் பட்ட சிறுமானியங்கள் ஒண்டும் எங்களுக்குத் தெரியாதாகா...... நாங்க எந்தச் சிங்கப்பூர் சீமையில இருந்து வந்தகா... ஆ? நான் லேசில வாயத் துறக்கமாட்டன்! துறந்தனே...... புறகு இவய சீலக்க புடவைக்க ஒண்டையும் வச்சிரிக்கத்தேளுவல்ல! புட்டுப் புட்டு வச்சிருவன் வெட்டயால! இவியிர பொட்டுக்கட்டுகள் ஆளுக்குத் தெரியாகா ... கதைக்க வந்தித்துகள்! ஓங்கா...... காலங் கெட்ட கேட்டுக்கு ஒமெண்றன் .....

களமுதறிக் கஞ்சி குடிச்சதுகள் எங்க பெத்தம்மையிர கோடி வேலி கட்டிக்கொண்டு போய்ப் புளச்சதுகள். அவண்ட இவண்ட கச்ச புளிஞ்சிகாச்சி குடிச்சதுகள் எல்லாம்



இப்ப மனிசனுப்போச்சிகள். சோறு தின்ற வட்டிவையும் சேருவக்காலயும் கொண்டு குடுத்துப்போட்டு, பல்லக் காட்டி எண்ட மாமன் மானு கப்போடி பட்டற துறந்து அளந்து குடுக்க... திண்டு புளச் சதுகளெல்லாம்... அதுகள் கக் குன வெண்ணெரைய மறந்து போய்... பேசுற பேச்சுகள்ற தராதலத்தப் பாரு... நுண்ணு ரியத்தப்பாரு... ஓங்கா... ஓல கம் கெட்ட கேட்டுக்கு! ஓமெண்றன்......

நான் இவியளுட்ட யெல் லாம் என்ன கேட்டுப்போற... எட்டில தப்புல... ஒரு காக் கொத்து அரக்கொத்தரிசி கேட்டுப்போனுப்பல ... இவி யளுக்கு தாறத்துக்கென்ன? சும்மாவா... கடனக் கட்டப் பட்டு இறுக்காமசெத்தா போயிருவன்...?

''என்னத்த நம்பி உனக் குக் கடன் தாறது? அரிசி அரிசியெண்டு வாங்கித்துப் போனுப்பல போதுமா வாங் சினத்தத் திருப்பித் தரவேணு மே! உன்னப்போல பொண் புரசுகள் உளேச்சிப் புளேக்கல் லயா? ஏன் நீயும் என்னவும் தொழிலச்செய்தா என்ன?'' எண்டு புது நாணயமான புத்தி சொல்லுதுகள்! அந்தக் காலத் தில எண்ட அப்பன் இது களுக்குச் சொன்ன கதயளப் பாடமாக்கி வச்சிருந்து இப்ப நமக்குச் சொல்லுதுகள். ஓங் கா! ... ஓலகங் கெட்டகேட் டுக்கு ஓமெண்றன் .....

எண்ட அம்ம என்ன அப் பிடி இப்படியா வளத்தவள் ... அடல அடலயா சோத்தில பேத்து வச்சி இள உறத்தயிர்ல ஆடையோட வெட்டி வச்சி, கதலி வாழப்பழம் ஒண் டொண்டு முன்னங்கைப்பருப் பம் உரிச்சிப்போட்டு சக்கரப் பாணியிலயும் கொட்டுவா அம்ம! ஆசையில போட்டுப் பிணேஞ்சி போட்டு அப்பிடியே வட்டியோட போட்டுத்து எழும்பிருவன்! ஏங்கா...... இந்த நசுக்குத்தீன் திண்டுதா னுகா நீ ஆளாச் சங்கையா ஆகிற எண்டு கேப்பாவு அம்ம, நானுட்டுத்து எழும் பின வட்டிய வழிச்சி நக்குன துகள்... நண்டியத்துப் பேசு துகள். திண்டு கழிச்சதுக ளிட்ட போகவேணும் கடன் கேக்க எண்டு முன்னுள்ளவன் சொன்னது பொய்யாகா பின்ன...? அறங்கையும் அத்து நக்க புறங்கையும் அத்துக் கிடந்ததெல்லாம் இப்ப பெரிய எடுப்படிக்குதுகள். ஓங்கா...! ஓலகம் கெட்ட கேட்டுக்கு... ஓமெண்றன்!

அவர் ஒராள் ... அவர்ர வீட்ட வேலகாறிக்கு வரட் டாம். சோறுஞ் சீலயுமா நல்ல சொகமா இருக்கலா மாம் மாதா மாதம் சம்பள முந் தாராரும்...! கொள்ளி கொத்துறவன் எண்டும். கோடிக்கு தண்ணி வைக்கிற வன் எண்டும் ... ... தேங்கா திருவுறவன் எண்டும் தட்டு வேலி கட்டுறவன் எண்டும் எங்கப்பண்ட அடும வேல வெட்டி செஞ்சி புளேச்சதுகள் எத்தின ஆயிரம் பேர்... அப் பன் குடுத்த சோத்துக்கு கணக் கென்ன ...சம்பளம் சாடிக்குக் கணக்கென்ன? அதெல்லாம் மறந்து போயுத்துகள்! இப்ப என்னடாண்டா அதுகள்ற அடுப்படி வேலேக்கு நம்மக் கூப்புடுதுகள்!

வெடியரசிப் போடியெண் டால் குடியெல்லாம் நடுங் குது. எண்ட அப்பன் அப்படி இப்பிடிப் போடியாகா......? அவர் ஊர்ப்போடி! போடி

மகன் போடி... ... பரம்பரப் போடி! அவர் இந்த ஊரக் கட்டி யாண்டாப்பல இன்னும் ஒருவர் பாக்கயா.....? அதில வேலல்ல! சுதந்திர நெல்லு மட்டும் வாசல்ல அஞ்சி அட்டுவம். அட்டுவம் எண்டா அப்பிடி இப்பிடி அட்டுவமில்லக்கண்டயோ .... அட்டுவத்துக்கு நாடங்கொடி ஏறிப்படந்து, காய்ச்சிச் சொலிச்சுட்டுக் கிடக்கும்! வயிரவனுக்கு அடுக்குச் சாத்தின பொல்லுகள் போல அங்க கண்கொண்டுகள் பார்க்கொண்ணு..... அதிர பசுந்து!

மாரி மழ வந்து அடச்சிப் புடிச்சிரவேணும்.. கருத்தலப் பஞ்சம் வந்திரும் எங்கட வளவு வாசல் தாங்காது சனம்! அதுகள்ற பட்டிணியக் கேட்டு அப்பன் சிரிச்சிப் போட்டு அட்டுவம் துறந்து அவர் அளந்து குடுத்த நெல்லுக்கு ஒரு கணக்கா வழக்கா......!

நெல்லு வித்துக் காசுகள் கையில வந்திர வேணும் அப்பன் நட்டார மாங்குட்டிக்கிவியளம் சொல்லிக் கூப்பிடுவாரு. ஒரு வரிசம் போட்ட மாடம். அழிச்சி அழிச்சி வண்ணத்துக்கொண்டு வகைக் கொண்டு செஞ்சி தருவார். அம்மையும் நாங்களும் பொன் காச்ச மரந்தான்! கோயில் கொண்டாட்டம் கூத்துக் கீத்தெண்டு வெட்டக்கிறங்கிற்ருப்பாக்க வேணும்...... ஊர் தேசம் ஒதுங்கி நிண்டு.. பாக்கும் அம்மையிர காசிமேசன் பட்டுப்புடவ நக நட்டயெல்லாம் எண்டம்ம இந்த ஊர்ல ஒரு ராசாத்தி மாதிரி இருந்து அரசாண்டவள்! இண்டைக்கு, கழுத்தில கீர மணிக்கும் — காதில ஓலச்சுருளுக்கும் வழியில்லாமக் கிடந்ததெல்லாம் இப்ப தராதலத்தில நிக்குதுகள்! நகயள இரவல் [illegible]கிப் போட்டுப்போட்டு ஊரார் தேச்சுத்தள்ளுன எத்தினவிராகன் பொன்! எண்டு உங்களுக்குக் கென்னடி தெரியும்! நேத்து நீ கண்ட தங்க நகய நாய் வாற கடப்பில கட்டு! நாயிர... தேன் வச்சா நாய் தான் திரும்பி நக்கவேணும்! இயின திரியுறுரே மாய்ற்றரோ... கீய்ற்றராம்! இவருக்கென்ன நான் சும்மா கிடந்தா...? சட்டி பானை வைக்கட்டாம்! பொட்டி சுளகு இளைக்கட்டாம்! இடியப்பம் புட்டவிச்சி விக்கட்டாம்..... அதுகள்ல ஈனமில்லையாம்! ஓங்கா...... ஓலகம் கெட்ட கேட்டுக்கு... ஒமெண்றன் எண்டப்பன் வெடியரசிப்போடி! நான் கெட்டாலும் செட்டி கிழிஞ்சாலும் பட்டு! இதுகள எண்ட சாதி சனம் சந்தானம் அறிஞ்சா நஞ்சி திண்டு நாண்டுருவானுகள்! நான் பட்டினி கிடந்து செத்தாலும்... எண்ட குலத்துக்கு ஈனம் உண்டாக்க மாட்டன், எங்கட தகுத்துகள இதுகளுக்கென்ன தெரியும்! அதுகள் செய்து புளைச்சத நமக்கும் சொல்லிப் பாக்குதுகள்!

ஊர்ல காசு தெண்டி எண்டப்பன் கட்டிக்குடுத்த கோயில் கிணத்தில தண்ணியள்ளிக் குடிச்சிற்றுக் கிடந்ததுகள்... நாம ஒள்ளம் தண்ணியள்ளப் போனு வக்கணம் கதைக்குதுகள். ஏன் எனக்குக் கிணறில்லாமயா... துலாந்து துலாக்கால் கழண்டு போய்த்து. ஆண் துண இல்ல .... அதப்போட்டுக்க. மண்ணுக்க கிடந்தா இறந்துபோகுமெண்டு போட்டு வண்ணுனுக்குக் கொள்ளிக்கு வித்துப் போட்டன். அப்பிடி இப்பிடித் துலாந்தா அது? திருக்

கொண்ட வயிரம்! அப்பன் தேடி[illegible]போட்டுக் கிடந்த படியா போன மாரிக்கு வித்துத் திண்டன். அதெல்லாம் இதுகளுக்கொரு பகுடி துலாந்தையும் வித்துத் தின்றதா? எண்டு கேக்குதுகள்! கைவாளி கிணத்துக்க ... அது ஆறேழு மாசத்துக்கு முந்தி விழுந்த! மாரி மழ...... எடுத்துக்கல்ல. அதுக்காக அடுத்த வீட்ல தண்ணி அள்ளுறல்லயா?...

இடியப்பக்காறி கடன் கேப்பாளே எண்டுபோட்டு நித்திரக்காறிபோல படுக்கன் புட்டுக்காறி நேரத்தோட வந்து...... தந்தாள் வாங்கிப் போட்டன். இடியப்பக்காறிக்கும் புட்டுக்காறிக்கும் போட்டி! இந்த விடியச் சாமத்தில அடுத்த ஊர்ல இருந்து... மழ தண்ணியெண்டு பாராம புட்டும் இடியப்பமும் அவிச்சிக் கொண்டு வந்து விக்காளுகள் இதுகளும் ஒரு புளேப்பா! இடியப்பக்காறி வாறுள் போல ஒ..... ஒ..! அவள் தான். பேசாமப் படுப்பம் ... அதுக்குள்ள இந்த நாசமத்த கொடடாவி ...... கோயில்ல சங்கூதுறுப் பல!......

கடங்காறர் நடயா நடந்தாப்பல நான் என்ன செய்யிற கடனக்கட்டப் பட்டுத் திண்டத, கடனக் கட்டப்பட்டுத்தான் இறுக்கவேணும் அதுக்காக... அப்பச்சட்டி வைக்க... அவியளுக்கு இவியளுக்கு ஊழியம் செய்யப் போகலாமா? அதெல்லாம் எண்ட குலத்துக்கு ஈனமெண்டு தான் சிவனே விதியே எண்டு... கிடக்கன். அதப்பாத்து இந்த ஊர்ல இரிக்கிற கஞ்சாங் கொத்திகள் என்னெல்லாம் கதகாலுகள் கதைக்குதுகள் .. ஓங்கா......! ஒலகம் கெட்ட கேட்டுக்கு! .. ஓமெண்றன்!

வெடியரசிப்போடி யெண்டால் குடியெல்லாம் நடுங்கும்! எண்டப்பன் என்ன அப்பிடி இப்பிடிப் போடியா? அவர் ஊர்ப்போடி! போடி மகன் போடி! பரம்பரப் போடி! அவர்ர மூத்த மகள் நான்! போடி மகள் பொன்னம்மா!

என்னப் பாத்துக் கதகாலுகள் கதைக்குதுகள். ஓங்கா...... ஒலகங் கெட்ட கேட்டுக்கு... ஓமெண்றன். *


# கல்வி நிலையம்

**பிரதான வீதி, கல்முனை.**

சிங்களம், கணக்கியல், இலக்கியம், டைப்பிங், சுருக்கெழுத்துப் பாடங்கள் மிகுந்த சிரத்தையுடன் கற்பிக்கப்படுகின்றன.

பரீட்சைகளுக்குத் தயார் செய்பவர்களும், சுயமாகச் சம்பாதிக்க விரும்புகிறவர்களும் மிகுந்த பயன் அடையலாம்.

**EDUCATION CENTRE**

**MAIN STREET, KALMUNAI.**

# அன்புச்செல்வம்

## "கண்மணி"

—★—

டெலிபோன் மணி கிணுகிணுத்தது. எதிர்ச்சாரியிலிருந்து 'லேடிஸ் ஹவுஸ்' சர்ஜன் பேசினுள்.

"யார் வேண்டும் உங்களுக்கு"?

"கால் மிஸ் சீலா பிளீஸ்" வசந்தன் அடக்க முயற்சித்த குதூகலம் அவனையும் மீறிக் குரலில் வெளிப்படுத்தியது. இரண்டு நிமிடம் கரைந்தபின் சீலா பேசினுள்.

"ஹலோ! குட் ஈவினிங்; டாக்டர் வசந்தன்" மாலைத் தென்றலின் சுகானந்தம் அவன் செவியில்மோதி உடலைக்கழுவிக் குளிப்பாட்டியது.

"குட் ஈவினிங் நான்தான் பேசுவேனென்று உனக்கு எப்படித்தெரியும் சீலா?"

"அங்கே இருந்து வேறு யார் எனக்குப் போன் பண்ண முடியும் உங்களைத்தவிர; தவிரவும் உங்கள் அழைப்பை நான் எதிர்நோக்கியிருந்தேன். நாளை நாம் இருவரும் கிராமத்துக்குக் 'காம்ப்' போகும் விஷயத்தைப்பற்றிப் பேச அழைப்பீர்களென்று தெரியும்"

"அதற்கு மட்டும்தானு?"

"அது உங்கள் இதயத்தைக் கேட்கவேண்டிய கேள்வி" குரலின் நாணம் பேச்சில் இழையோடியது.

"ஏன் அது உன் இதயத்திலும் எதிரொலிக்கவில்லையா?"

"இணைந்த இரு இதயங்கள் பேசுவதை நாம் ஒட்டுக்கேட்பது முறையா?"

கலகலவென்று நகைத்தான் வசந்தன். "சரி சரி

---

வெளியிற் சொல்வதற்குத் துணிவை ஒருவர் பெறுவதற்கு எவ்வளவுக்கு முன்னரே உண்மைகள் கண்டுகொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. 'சில சமய வரம்புகளுக்குக் கட்டுப்படுவதனுல் மட்டுமே சமயங்கள் மனிதருக்குப் பாதுகாப்பையும் மகிழ்ச்சியையும் தரும்' என்பதற்கான வலியுறுத்தல்கள் நம்புதற்குப் பெறுமதியற்றிருக்கின்றன.

— சிக்மண்ட் ஃப்ரொய்ட்.

போனில் இப்படி நாம் பேசிக் கொள்வது தவறு. "காம்ப்" போகும் விஷயம்பற்றி உன்னிடம் பேசவேண்டும் எங்கே உன்னைச் சந்திப்பது?"

"மணி இப்போது நாலரை; ஐந்து மணிக்கு 'லைப்ரரி'யில் இருப்பேன் வாருங்கள்; போனை வைக்கட்டுமா?"

"சரி"

எதிர்ச்சாரியில் போன் வைக்கும் ஒலி கேட்டது. வசந்தன் புன்னகையோடு தன் அறையை நோக்கி நடந்தான்,

முகம் அலம்பி விட்டுத் தலை சீவும்போது 'டெனிஸ்' மட்டையும் கையுமாக மோகன் உள்ளே வந்தான்.


"என்னப்பா வசந்தன் நீ இன்னும் ரெடியாகவில்லையா?"

''இல்லை மோகன் இன்று நான் ஆடவரமுடியாது 'காம்ப்' போகும் விஷயமாக நான் சில முக்கியமான அலுவல்களைக் கவனிக்க வேண்டும்''

''அது சரி உனக்குப் பாட்னர் யார்?''

''மிஸ் சீலா''

''இப்போது புரிகிறது முக்கிய அலுவலின் முக்கியத்துவம். ''லக்கி பெல்லோ!'' என்றுகூறி வசந்தனின் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டுப் போனான் மோகன். வசந்தன் சிரித்துக்கொண்டான்.



வசந்தன் மருத்துவப் பயிற்சி முடிந்து இந்த மருத்துவ மனைக்குப் பணியாற்ற வந்து கிட்டத்தட்ட ஒரு வருடமாகிவிட்டது. அவன் வந்து சேர்ந்து இரண்டு மாதம் கழித்து சீலா வந்து சேர்ந்தாள். இருவரும் ஒரே வார்ட்டில் இணைந்து பணியாற்றிய சமயங்கள் பல. அப்போது சாதாரண உரையாடலில் அரும்பி சகஜமான பேச்சுக்களில் மலர்ந்து அதன்பின் வலிந்து பேசி மணம் பரப்பியது அவர்கள் நட்பு. அவளுடைய ஒவ்வொரு சிறுபேச்சும் அவனுள் ஒரு இன்ப அதிர்வை ஏற்படுத்தியது.

ஒவ்வொரு பார்வையும் பனிச் சிதறலாய் பாவ ரசங்களாய் அவனை மெய்சிலிர்க்க வைத்தது. ஒரு கூடை மலரை அப்படியே அவன் நெஞ்சில் கொட்டிக் கவிழ்த்தாற் போல் அவர்களுடைய ஒவ்வொரு சந்திப்பும் உரையாடலும் இன்ப மணமாய் அவன் இதயத்தில் கமழ்ந்தது.



* * *

'லைப்ரரி' வாசலில் சிநேகிதிகளுடன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த சீலா, தூரத்தே வசந்தன் வருவதைப் பார்த்து விட்டாள். அகத்தின் மலர்ச்சி முகத்தில் விகசிக்க நாணம் கரந்து நகை அரும்ப அவனை விழிகளால் வரவேற்றாள். வசந்தனின் வரவைப் புரிந்துகொண்டு தோழிகள் விலகினர். வசந்தன் சீலாவை நெருங்கினான். அப்போது சீலாவின் முகப்பொலிவு! என்றோ அவன் தன் நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்திருந்த அழகிய வாக்கியத் தொடர் நினைவுக்கு வந்தது. மனம் அந்த வாக்கியத்தைச் சொல்லிப்பார்த்துக்கொண்டது. உலகம் என்ற பெண்ணை அழகூட்ட மண்ணில் எத்தனையோ விதமான அலங்காரப் பொருள்களிருந்தும் நிலவு என்ற காதலன் அவளைத் தழுவும்போதுதான் அவள் ஈடிலாவனப்புடைய மங்கையாகிறாள்.

சுற்றிவரத் தோழிகளுடன் மகிழ்ச்சியாக உரையாடிக்கொண்டிருந்த அவள் முக அழகைவிட இப்போது வசந்தனின் எதிரில் அவன் பார்வைக்கு இலக்காகி விழிகள் படபடக்க நிற்கமுடியாமல் கால்கள் துவள கரங்கள் சேலைத்தலைப்புடன்விளையாட பேச நினைத்ததைப் பேசமுடியாமல் மௌனமாகிப் பேராச்சரிய வனப்புடன் ஒல்கி ஒசிந்து நிற்கும் அந்தப் பெண்மையின் பூரண சௌந்தரியத்தைக் கண்டு மெய்சிலிர்த்தான் வசந்தன்.

இருவருக்குமே பேச நினைத்த விஷயம் ஞாபகத்தில் இல்லை. மாறாக பேசாத பேச்செல்லாம் விழிகள் நான்கும் பேசித்தீர்க்க, வாயிருந்தும் ஊமையாகி நின்றனர். வசந்தன் பெருமூச்செறிந்தான் —

சீலா தன் நிலைக்கு வந்து அருகில் கிடந்த பெஞ்சில் உட்கார்ந்துகொண்டு வசந்தனைப் பார்த்தாள். பொருள் புரிந்துகொண்டு அவனும் அருகில் அமர்ந்தான். பிறகு கால் மணி நேரம் காதலை மறந்துவிட்டு கடமையைப்பற்றி இருவரும் கருத்துப் பரிமாறிக்கொண்டனர். பின்பு பிரிந்தனர்.

வெகு சீக்கிரத்திலே அவர்கள் அன்பின் பிணைப்பு உறவு எனும் பிணைப்புடன் சேர்ந்து இறுகி ''தம்பதி'' எனும் ஒரே முடிச்சாக இணைந்தது. அவர்களுடைய அக வாழ்க்கை எப்படி அன்புச் சுனையாக வற்றாத ஊற்றாகப் பெருக்கெடுத்ததோ அதே போன்று புற வாழ்க்கையும் ஒரே சீராக புகழும் பெருமையுமாகப் பூத்துக் குலுங்கியது. இருவருமே தங்கள் கடமையில் ஒருவரை ஒருவர் மிஞ்சினர். வெளியில் கடமையில் களைத்தாலும் வீட்டில் தனிமையில் தேன் துளியாய்ச் சிதறும் அன்பின் நறுமணத்தில் இருவருமே திளைத்து களைப்பை மறந்து களித்தார்கள். எல்லாம் ஒரு வருட காலத்துக்குள்தான். அதன்பின் .......?

அன்று விடியற்காலை கடிகாரத்தில் ஆறு மணி அடித்து ஓய்ந்தது. துயில் களைத்த வசந்தன் தன் அருகே இன்னும் எழுந்திருங்காமல் படுத்திருக்கும் சீலாவின் முகத்தை உற்று நோக்கினான். அவள் இன்னும் அயர்ந்து தூங்கிக் கொண்டுதானிருந்தாள். தொடர்ந்து சில நாட்களாக வசந்தன் அவதானித்து வந்த விஷயம்தான் இது. சோர்வும் அசதியுமாக அவள் வளைய வருவதை, வசந்தன் கண்டும் காணாததுபோல் இருந்துவிட்டான். சந்தேகம் மட்டும் அவனிடமே தங்கி விட்டது. துவண்டு கிடந்த அவள் கரங்களைப்பற்றி லேசாக அழுத்தினான் அதற்குப் பதிலாக அவளிடமிருந்து மெல்லிய அலுப்பானமுனகல் ஒலிதான் வெளிப்போந்தது.

வசந்தன் பரிவுடன் அவள் கேசத்தை கோதிக் கொடுத்தான். ஒரு கை அவள் இடையைச்சுற்றி வளைத்தது அன்புடன் அணைத்த அவன் கரங்களை மெல்ல விலக்கிக்கொண்டு ''பிளீஸ்'' என்னைத் தொந்தரவுசெய்யாதீர்கள். எனக்கு உடம்பு அசதியாயிருக்கிறது. இன்று நான் ஆஸ்பத்திரிக்குக் கூட வரமுடியாது போல் இருக்கிறது.'' என்றாள் மறுபக்கம் புரண்டு படுத்துவிட்ட மனைவியை புதிராகப் பார்த்தான் வசந்தன். மென்மையான அவள் கரங்களைத் தொட்டு நாடி பார்த்தான். அவன் முகம் மலர்ந்தது. அவனுடைய உள்மனம் அவனைக்கேட்காமலே குதித்துக் கும்மாளமிட்டுதன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டது. கண்களில் கனிவு கொஞ்ச, கண்மூடிப் படுத்துக்கொண்டிருக்கும் அவளை நோக்கினான். அவன் கரங்கள் இரண்டும் எதற்கோ துருதுருத்தன. அதன் இச்சையைப் போக்க அவன் மனம் விழைந்தாலும் அவளுக்குத் தொல்லை கொடுக்க மனமில்லாமல் தான் பற்றியிருந்த கரங்களைச்சேர்த்து தன் உதடுகளை அதில் பதித்தெடுத்தான் அப்போதும் அவள் கண் திறக்கவில்லை. கலைந்திருந்த போர்வையை இழுத்து நன்றாக அவளைப் போர்த்திவிட்டு

அறையைவிட்டு வெளியேறினான் வசந்தன்.

அன்று மாலை சீக்கிரமே வீடு திரும்பினான் வசந்தன். வாசலில் அன்பு மனைவியின் அழகு முகத்தை எதிர்பார்த்துப் படியேறியவன் ஏமாந்தான். சமாளித்துக்கொண்டு உள்ளே அவள் அறையை நோக்கி அடியெடுத்து வைத்தவன் திடுக்கிட்டான். அங்கே ஜன்னலின் விளிம்பில் உட்கார்ந்தும் உட்காராத நிலையில் தூரத்தே வீதியை வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்தாள் சீலா சற்றுமுன் அழுததற்கு அடையாளமாக கண்கள் இரண்டும் சிவந்து குழம்பிக் காட்சியளித்தன.

தன்னை வெகுவாக நிதானித்துக்கொண்டு அருகே சென்று 'சீலா' என்று கனிவாக அழைத்தபடி அவள் தோள்களில் கரம் பதித்தான் வசந்தன். நீர் தழும்பிய விழிகளால் அவனைத் திரும்பி நோக்கிய சீலாவின் பார்வையிலிருந்து அவனால் எதையும் புரிந்துகொள்ள முடியாமல் திணறினான்.

''சந்தோஷப்பட வேண்டிய நேரத்தில் ஏன் அழுகிறாய் சீலா''

''எது சந்தோஷம்? நானென்றும் அப்படி இந்த சந்தோஷத்துக்காகப் பறக்கவில்லையே வசந்'' வசந்தன் அதிர்ந்தான் நீ என்ன சொல்கிறாய் சீலா? தாய்மையை வெறுக்கும் பெண் உண்டா? படபடப்பை அடக்கிக் கொண்டு இயல்பாக பேச முயன்றான் வசந்தன்.

''உண்மையாகக் கேட்கிறேன் இப்போது நமக்குக் குழந்தை அவசியம் வேண்டியதுதானா?

''இப்போது என்றால்''

''இவ்வளவு சீக்கிரம் என்று அர்த்தம்.'' இத்துணை கசப்பாக அவள் பேசி அவன் அறிந்ததில்லை.

''நமக்குக் கல்யாணமாகி ஒரு வருடம் முடிந்துவிட்டதே சீலா''

''ஒரு வருடம் என்ன பெரிய இடை வெளியோ?''

''உன் பேச்சு எனக்குப் புரியவில்லை உனக்குக் குழந்தை பெற ஆசையில்லையா?''

''ஆசையுண்டு ஆனால் அவசரமில்லை இன்னும் சில காலம் உங்களுடன் மட்டுமே என் வாழ்வை அன்பைப் பகிர்ந்து கொள்ள ஆசைப் படுகிறேன் வசந். அதற்குள் இன்னொருத்தருக்கு என் அன்பில் பங்கு வைக்க நான் விரும்பவில்லை.''


''அதற்குக் குழந்தைப் பேறு ஒரு தடையா?'' வசந்தன் வியப்பு வழியக் கேட்டான்.

''நான் அப்படித்தான் நினைக்கிறேன்''.

''தவறு சீலா, அப்படி ஒரு கருத்து உன் நெஞ்சில் இருந்தால் அதை இந்தவினாடியுடன் துடைத்துவிடு. நம்மிடையே தோன்றப்போகும் சின்னஞ்சிறு உயிர் நம் அன்பின் சங்கமத்தில் உதிக்கப் போகும் ஞாபகச் சின்னமல்லவா? அதனால் நம் பிணைப்பின் முடிச்சு இறுகுமேதவிர நீ நினைபது போல் நைந்து போக வழியில்லை. பாசத்தில் பங்கு கொண்டாலும் பத்துப் பங்காகத் திருப்பிக் கொடுப்பான். ஒரு மனைவியின் அன்பு கணவன் என்ற குறுகிய வட்டத்துக்குள்ளே சுருங்கிவிட

லாமா? அது நியதியில்லையே குழந்தைகள் என்ற அதன் பரப்பின் எல்லை விரிவடையத் தான் வேண்டும். அதுதான் தாய்மையின் சிறப்பு. அதை விடுத்து கணவன் மனைவி என்ற குறுகிய வட்டத்துக் குள்ளே சதா சுழன்றால் அதில் கூடிய சீக்கிரம் விரிசல்விழுந்து சலிப்பேற்படும்.''

சீலா அவன் வாதத்தால் சமாதானமடையவில்லை என் பதை அவள் முகம் அவனுக்கு உணர்த்திற்று. முதல் தடவையாக அவள் அண்மை அவனுக்குச் சலிப்பேற்படுத்



தியது. சோர்வுடன் தன் அறையை நோக்கி நடந்தான் வசந்தன்.

நாட்கள் ஜீவனற்றுக் கரைந்தன. சீலா ஆஸ்பத் திரிக்கு வருவதை அடியோடு நிறுத்தி விட்டாள். 'நர்சிங் ஹோமில்' அவள் இடத்தில் அவளுக்குப்பதிலாக தனக்கு உதவியாக வேறொருபெண்ணை அமர்த்திக்கொண்டான் வசந் தன். சீலாவின் உடல்நிலையை உத்தேசித்தே அவளுக்கு அவன் ஓய்வு கொடுத்தான். வெளியே எங்கும் செல்லாமல் அவள் வீட்டிற்குள்ளே அடைந்து கிடந்தாளென்றால், வசந்தன் ஆஸ்பத்திரியிலே பெரும் பொழுதைக் கழித்து ஆறுதலடைய முயன்றான்: இருவர் மனதிலும் நிம்மதி யில்லை. பேச்சிலும் முன்

பிருந்த அன்பின் ஆர்வம் இல்லை. ஒருவருக்கொருவர் அவசியமின்றி பேசிக் கொள்வதுமில்லை.

சில நாட்களில் நடுநிசிக்கும் பிறகு வீடு திரும்புவான் வசந்தன். களைப்புடன் தன் அறையை நோக்கி நடக்கும் அவன் கால்கள் ஒரு நாளாவது மனைவியின் கட்டிலின் அருகில் சிலவினாடிகளாவது தயங்கத் தவறுவதில்லை. மனத்துக்குள் கருத்து வேறுபட்டிருந்தாலும் அவள்உடல் நிலையில் அவனுக்கு நியாயமான அக்கறையும் கவலையும் உண்டு. அவன் கொடுக்கும் மாத்திரை மருந்துகளை அவள் சரியாகச் சாப்பிடுகிறாளா, இல்லையா? என்பதை வெகு உன்னிப்பாக அவதானிப்பான்.

தயங்கும் அந்தச் சில வினாடிகளில் தன்னை மறந்து உறங்கும் மனைவியின் அண்மையில் லேசாக எழுந்து அமரும் மெல்லிய மூச்சில் விம்மித் தணியும் அவள் வயிற்றுப் பகுதி அதனுள் நூணுக்கமான அதிர்வை ஏற்படுத்திக்கொண்டு விளையாடும் அவனின் உயிரின் உயிர் சின்னஞ்சிறு கால்களோ கைகளோ அவள் வயிற்றுச் சுவரில் இடித்து விளையாடும் போது அந்தப் பிஞ்சுக் கால்கள், பூமேனி எவ்வளவு நோகும். வசந்தனுக்கு மெதுவாக அந்த இடத்தில் தடவிக்கொடுத்து அந்த இனிய சுகத்தில் பங்குபெற இதயம் துடிக்கும் கைகள் துருதுருக்கும். ஆனால் ஏதோ ஒன்று அவனைத் தயங்க வைத்துப் பின்னடைய வைக்கும் கண்ணீர் பார்வையை மறைக்க தன் படுக்கையில் போய் விழுவான்.

எப்போது எப்போது என்று இருவரும் ஆசையுடன் எதிர்நோக்காவிட்டாலும் அந்த நாளும் வரத்தான் செய்தது. சீலா துடித்துக் துடித்துக் கொண்டிருந்தாள். வசந்தன் உள்ளுக்குள்ளே தவித்தாலும் வெளிக்கு ஒரு டாக்டர் என்ற உணர்வுடன் உறுதியைக் கடைப்பிடிக்க பாடுபட்டான். குழந்தை பிறந்தது. ஆனால் சீலாவின் மனக்கசப்புக்கு இனிமேலும் ஆளாக விரும்பாததுபோல் இறந்தே பிறந்தது. வசந்தனின் உள்மனம் ஓலமிட்டது. பிரவசம் பார்த்த லேடி டாக்டர் தன் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டாள்.

வசந்தன் மெதுவாக சீலா படுத்திருந்த கட்டிலைச் சமீபித்தான். அவள் விம்மிக் கொண்டிருந்தாள் ''ஏன் அழுகிறாய் சீலா? உன் விருப்பம் நிறைவேறிவிட்டது தானே: நீஅழுவது பொருத்த


## வியாபாரிகளே !

ஈழத்தில் மிகச் சிறப்பான முறையில் வெளிவரும் சஞ்சிகை ''மலர்''. நிறைந்த விளம்பரப் பலனைப் பெற, நாடெங்கும் விநியோகமாகும் 'மலர்' சஞ்சிகையில் விளம்பரம் செய்யுங்கள். ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு உங்கள் பங்கைச் செய்யுங்கள்.

## இடமாற்றத்தை அறிவியுங்கள்

பாடசாலையில் உள்ள 'மலர்' சந்தாதாரரான ஆசிரியர்களின் ''மலர்'' பிரதிகள் அப்பாடசாலையின் தலைமையாசிரியரது முகவரிக்கே அனுப்பப்பட்டுவருகின்றன. ஆகையால் 'மலர்' சந்தாதாரரான ஆசிரியர்கள் இடமாற்றம் பெறும்போது, புதிய பாடசாலை முகவரியை உடனடியாகத் தெரிவிக்கும்படி வேண்டுகின்றோம்.

—ஆ-ர்.

மாயில்லையே'' இது நாள் வரை அடக்கி வைத்திருந்த வேதனை வெறுப்பாக அவள் மேல் உமிழ்ந்தது. சீலா பதறிப்போனாள். அவன் கரங்கள் இரண்டையும் பற்றி தன் வதனத்தை அவன் உள்ளங்கைக்குள் பதித்து மேலும் உரக்க அழத்தொடங்கினாள். வசந்தன் மரமாக நின்றான். அவன் இதயம் இளகவில்லை.

''வசந்! என்னை மன்னிக்க மாட்டீர்களா? நான் தாய்மையை இகழ்ந்தேன் கடவுள் என்னைத் தண்டித்துவிட்டார். வசந்தன் சத்தியமாக சொல்கிறேன் அன்று நான் உங்களிடம் வெறுப்புடன் பேசினாலும் நாட்கள் செல்லச் செல்ல, என்னுள் நான் மட்டுமே உணர்ந்து அனுபவித்த அந்த இன்ப அனுபவங்கள் பொருள் பொதிந்த வினாடிகள் எனக்கு வாழ்வில் உண்மையான அர்த்தத்தை போதித்துவிட்டன. உங்கள் உதிரத்தின் அந்தச் சின்னஞ்சிறு உயிர் அணு என்னுள் எத்தனை கனவுகளை மலர்வித்தது! எத்தனை நம்பிக்கைகளை வளர்வித்தது! என்பது உங்களுக்குத்தெரியுமா? உங்கள் மனதைப் புண்படுத்தியதற்குப் பரிகாரமாக உங்கள் மகனை உங்கள் கரங்களில் ஒப்புவித்து மன்னிப்புக்கேட்க வேண்டும், மீண்டும் நம்முடைய மறைந்துவிட்ட அந்தப் பழைய அன்பும் கலகலப்பும் நிலைபெற வேண்டும் என்று எத்தனை ஆவலாக இந்த ஒரு நாளுக்காகக் காத்திருந்தேன்; கடைசியில்...... கடைசியில்... சீலா மீண்டும் விம்மினாள்.

வசந்தன் பழைய வசந்தனாகி அவள் வேதனையில் தானும் உருகினான். சீலாவின் மனமாற்றம் அவன் இதயத்தைக் குளிர்வித்தது. நிம்மதிப் பெருமூச்செறிந்தான் அவன் 'தாய்மையே உனக்கு வெற்றிதான்.' வசந்தன் அவள் அருகில் அமர்ந்து அவள் கண்ணீரைத் துடைத்தான். மெல்ல அவள் காதருகில் குனிந்து அவளுக்கு மட்டும் கேட்கும் மெல்லிய குரலில் ''கவலைப்படாதே சீலா மீண்டும் உன் ஆசை கிளைக்க கடவுள் கூடிய சீக்கிரம் அருள் செய்வார்'' வசந்தன் கூறிவிட்டுச் சிரித்தான். சீலாவின் வெளிறிய கன்னங்களில் நாணச் சிவப்பேற அவள் தன் வதனத்தை முற்றாக அவன் மார்பில் மறைத்துக் கொண்டாள். ★

# வாப்பா வருவார்


—திக்குவல்லை கமால்.

மாலை மறைந்து எங்கும் இருள் கவிந்து கொண்டிருந்தது. மரம், செடி, கொடிகள் நிறைந்த அப்பகுதியின் மத்தியில் அமைந்திருந்த அந்த ஓலைக் குடிசையில் மாத்திரம் குப்பி விளக்கொன்று மெல்லொளி பரப்பிக் கொண்டிருந்தது. வழமைபோல் பாம்போ, பூச்சியோ என்னவோ...! அவற்றின் தாளங்களும் மெது மெதுவாக எழுந்துகொண்டு தான் இருந்தன.

பயமறியாத சின்னக் குழந்தைகள் தமது எண்ணத்தில் உதித்ததையெல்லாம் கவலையின்றிச் செய்து கொண்டிருந்தன. அவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தபோதிலும் பஸியத்தும் மாவின் இதயத்திலோ தாங்க முடியாத வேதனைப் பளு, சொல்ல இயலாத பயப் பிராந்தி! இஸ்மாயீல் நானுவுக்கு அந்தக்கதி நடந்து ஆஸ்பத்திரியே தஞ்சமெனக்கிடப் பாரென்று யார்தான் நினைத்தார்கள்?

"உம்மா, உம்மா, வாப்ப எங்கியன்?" நான்கு வயதுக் குழந்தை வாஞ்சையோடு எழுப்பிய கேள்வி அவள் கொஞ்சம்கூட எதிர்பார்க்காததுதான்!

''வாப்ப வாரொண்டும் மகள். நீங்கபோய் வெளாடுங் கொ'' அதற்குமேல் ஒரு வார்த்தைகூடப் பேச முடியாதபடி யாரோ தொண்



டையை அழுத்திக் கொண்டிருப்பது போன்று உணர்ந்தாள். நல்லவேளை இன்னும் கேள்விக் கணைகளை எழுப்பிக் கொண்டிருக்காது குழந்தை போய் விட்டது.

அன்ெருநாள் — இடைவிடாது சொடுசொடென்ற மழைத் தூறல். மஹ்மூத் லெவ்வை வீட்டில் கூரை வேய வரும்படி அழைப்பு. அவருக்குப் போய் வேலை செய்ய விருப்பமோ, திராணியோ இல்லை! ஆனல், ஊருக்குப் பெரிய இடம் போக விட்டால் ஏதும் நினைத்துவிடுவார்களே என்ற பயமும்கூட! வழமையாக இந்தவேலை செய்பவர்களெல்லாம் முடியாதென்று தட்டிக் கழித்திருக்க வேண்டும். அதனுல்தான் தன்னை வருந்தி அழைக்கிருர்களென்பது அவருக்கு நன்ருகத் தெரியும்.

என்ருலும் இஸ்மாயீல் நானுவுக்குப் போகாமலிருக்க முடியவில்லை. எல்லோருக்கும் இறைவன் ஒரேவிதமான மனதைக் கொடுக்கவில்லையே!

நனைந்து' தோய்ந்த கூரையில் தனியே ஏறி வேலை செய்துகொண்டிருந்தவர், ஒரு பக்கச் சாய்வை வேய்ந்துவிட்டு அடுத்த பக்கத்திற்கு மாறியபோதுதான் கால் வழுக்கி விழுந்தார். ஏதோ ஆண்டவனின் ''கிருபை'' யால் கை முறிவைத் தவிர வேறு பாதிப்புகள் இல்லை.

இதை நினைத்தபோது பளியத்தும்மாவின் கண்களிலிருந்து ஊற்றெடுத்த கண்ணீர் கன்னமேட்டில் தவழ்ந்து வந்து அவளது மடியை முத்தமிட்டன. மனக்கிலேசத்தையெல்லாம் தாங்கிக் கொண்டு சூடான பெருமூச் சொன்று தோன்றி வெளியேறியது!
''ஆண்டவனே ஏண்ட பொகுத்தில பொறந்த குஞ்சிகொழந்தகளுக்காக அவரட ஆயிச நீடிச்சி, ஒழைச்சித்தின்னிற கையச் சொகமாக்கிவெய்'' அவள் எப்பொழுதுமே இறைவனிடம் இறைஞ்சிக் கேட்கும் ''துஆ'' தான் அப்பொழுதும் அவள் வாயிலிருந்து வெளிவந்தது.

''உம்மா பசிக்குதும்மா, பகலும் பாண்துண்டுதான் தந்த எனக்குச் சோறு தாங்கொ'' சிறிய பிள்ளையின் வேண்டுகோள் அவளுள்ளத்தைப் பிளந்தது. என்ன சமாதானத்தைச் சொல்வதென்று அவளுக்குப் புரியவில்லை.

''உம்மா எனக்கும் மிச்சமா பசிக்குது தங்கச்சிக்கு சோறு குடுத்தா எனக்கும் தரோணும்'' துள்ளிக்குதித்து வந்துநின்ருன் அடுத்தவனும்.

இரண்டு கரங்களாலும் இரு குழந்தைகளையும் வாரியணைத்துக் கொண்டாள். ''மக்கள் வாப்ப வந்தாப் பொறகு பொப்படம் பொரிச்சி, 'பலயன்' மீன் தீச்சி, நெய்ச்சோறெல்லாம் ஆக்கித் தரேன்'' என்று ஒருமாதிரியாகக் குழந்தைகளை ஏமாற்றிப் பழைய பாண்துண்டுகளைக் கொண்டு வந்து முன்னே வைத்தாள். மனமறிய ஏமாற்றுகிருேமே என்று தாய்ப்பாசம் அவளைக் குத்திக் கொண்டுதானிருந்தது. என்ருலும் வேறு எதுவும் செய்வதற்கில்லையே!

* * *

''ஊட்டிலதாரன்?'' தடித்த குரலொன்று அதிகார வலுவுடன் தொனித்தது. சந்தேகமேது? அவள் நினைத்த ஆசாமியேதான்!

நீண்டடர்ந்த கறுப்பு தாடி! வெள்ளைத் தொப்பி!! பச்சை ஜுப்பா! இவைகள் போதாதா? அஸனு லெவ்வை தான். அவரது பின்னே கையாள் குவைலித்நானுகூட மார்பை முன்னே போட்டுக் கொண்டு கம்பீரமாக நின்று கொண்டிருந்தார்.

''இது நாலாவது மொற யாச் செல்லியன். இந்த ரெண்டு மாதமா ஊட்டுக் கூலி தரல்ல. நாங்க காணித் துண்ட விக்கப் போறோம். நாளக்கி மானத்தோட ஒழும்பிப் பெய்திரோணும்'' அஸனு மொதலாளியின் ஆக்ரோசமான ஆக்ஞை இது!

''லெவ்வை.. லெவ்வ... கொஞ்சங் கேளுங்கொ ... .. கொஞ்சம்'' அச்சமும் நாணமும் பின்னிப்படர எதையோ சொல்லத் தடுமாறினுள் அவள்! அந்த ஏழையின் வார்த்தைகளுக்கெல்லாம் அவர் காது கொடுப்பாரா? போய்விட்டார்.

அவளது தலை திமிரிச் சுழன்றது. நினைவு நிலைபெறுது தடுமாறியது. சங்கிலித் தொடர் போல் இருக்கிற தொல்லைகளும் துன்பங்களும் போதாததுக்கு நாளை ஓலைக் குடிசையிலிருந்து வெளியேறவும் வேண்டுமாம்!

நிம்மதியாகக் குழந்தைகள் மண்தரையிலே ஆங்காங்கே புரண்டு தூங்கிக்கொண்டிருந்த காட்சி பார்க்கப் பரிதாபம்தான்: அவளுக்கொரு தற்காலிகத் துணிச்சல், அச்சமெல்லாம் எங்கே அகன்றோடி ஒளிந்து கொண்டதோ தெரியாது. காய்ந்த ஓலைத் துண்டுகளை யெல்லாம் சேர்த்துக்கட்டி ஒரு பந்தம் செய்துகொண்டு அந்த வெளிச்சத்துடன் தைரியமாக வெளியேறி நடக்கத் துவங்கினுள்! எங்கே .....?

அவளது துன்பங்களைக் கேட்டு உதவக்கூடிய சொந்தக்காரர்கள் யார்தான் இருக்கப் போகிறார்கள்? அவளுக்காக மனமிரங்கி அனுதாபம் படக்கூடியவர்களும் எவருமே இல்லையே! அப்படியிருக்க அவள் எங்கேதான் போகிறாளோ! ஆமாம், மஹ்மூத் லெவ்வையின் வீட்டுக்குத் தான்! அவளது சொந்தக் காரனோ அனுதாபியோ அல்ல! என்றாலும் இந்நிலையில் அவளால் பேச முடிந்தவர் அவர் மாத்திரம் தான்.

''நைகலை'' மலை மேட்டில் ஏறி, மரைக்கார் வளவு ஆதிகால ''மையத்துப் பிட்டனி''யில் தவழ்ந்து, வளைந்து, நெளிந்துபோய் முஸ்

---

உருவகம்

## 'புதுக் குருடி'

— வேதா

''அப்படியானுல் நீ என்னைத் தின்னு.'' — பெரிய மீன்

''இதோ!'' தீர்மானத்தில் நகர்ந்தது சிறிய மீன்.

பெரிய மீனின் பச்சைக் குஞ்சுகள் பலியாயின.

சுபீட்சம்!

---

லிம் வீதியில் சங்கமிக்கும் களி மண் ''ரோட்''டுதான் அது! புதுக்குடியிருப்பையும் தாண்டி விட்டாள் அவள். ஒரு பக்கம் காட்டுமரங்களின் ஆட்சி! மறு புறம் நீண்டுயர்ந்த மலே! அதன் சாரலிலே கிளேகள் படர்ந்த அத்திமரம் காற்றின் ஊடுருவலால் சலசலத்துக் கொண்டிருந்தது. ''ராவக் கிப் பிசாசெல்லாம் வந்து இதில இருந்துகொண்டு பாடிப்பாடிக் கூத்தாடும்'' இப்படியாக அவள் சிறியவ ளாக இருக்கும் போதே ஒரு கதை அடிபடுவது அப்போதும் அவள் நினைவில் எழத்தான் செய்தது. ஆனுல் அவளது வெறியும், துணிவும் அதை யெல்லாம் பொசுங்கச் செய்து விடக்கூடிய வலிமை பெற் றிருந்தது அப்போது.

எப்படியோ ஓடையடிக் குறுக்குப் பாதையையும் கட ந்து மஹ்முது லெவ்வையின் வீட்டைச் சேர்ந்துவிட்டாள். முன் விராந்தையில் ஏற்றப் பட்டிருந்த ''பெற்ருேல் மெக்ஸ்''ஸின் வெளிச்சம் அவ ளது! கோலத்தைக் கொஞ்சம் கூட மறைக்காது துலாம்பரப் படுத்திக் கொண்டிருந்தது. நார்நாராகக் கிழிந்து தொங் கிக்கொண்டிருந்த பழைய சேலே எப்படிப் போனுலும் அழுக்கு வர்ணத்தின் அலங் காரம் வெகு பிரமாதமாக வல்லவா இருந்தது. இந்தத் தோற்றத்தில் உள்ளே போ வதா, வெளியே போவதா என்ற பிரமையில் சிந்தனே வயப்பட்டு ஒரு கணம் அப் படியே நின்ருள்.

அபலேயாக அவதிப்படும் இந்த வேளேயில் எப்படியிருந் தால் தான் என்னவாம் என்ற எண்ணம் அடுத்த நொடியில் அவளே உந்தியிழுத்து உள்ளே கொண்டு சென்றது.

''லெவ்வ நாங்க இருக் கிய ஊட்டிலீந்து எழும்ப வேண்டிய நெல வந்தீக்கி. ஏண்ட மாப்பிளக்கி நடந்தீக் கிய கதி ஒங்களுக்குத் தெரீம் தானே? அல்லாட மொகத் துக்கு ஒரு அம்பது ரூவச் சல்லிதாங்கொ. அவரு சொக மாகங்காட்டீமாவது அங்க தானே நிக்கோணும்'' அழுது புலம்பி ஏற்பட்டிருக்கும் அவலநிலேமை ஆத்திரத்தோடு ஒருவாறு சொல்லித் தீர்த் தாள்.

''அதுக்கு நான் என்ன செய்றது? அந்தாள் வுழுந்த நேத்தேல 'தொண்டில்லே' இஸ்புர்தாலேல கொணு பெய்த்துப் போட்டு இன்ன முள்ள வேலவெட்டியெல்லம் செஞ்சி எனக்கெவளவு செல வெண்டுதெரீமா''

''மொதலாளி! மனசறிய ஒங்கட ஊட்டில வெச்சித் தானே அது நடந்தது. அத ஞல நீங்க இப்பிடிச் சொல்ல லாமா?''

''எங்க நடந்தாலும் எனத்தியன்? கவனமில்லாம வேலசெஞ்சது தாடகொற யன்? அதுகளபத்தி இப்ப பேசி வேலில்ல''

''லெவ்வ! அப்ப இன்னங் கொஞ்ச நாளக்கி நிக்குடச் செல்லி நீங்களாவது செல் லுங்கொ. அஸனுலெவ்வை ஒங்கட தம்பிதானே!

''இது பெரிய தலக்குத் தாயீக்கி! அதிலயெல்லம் எனக்குத் தலபோட்டுக்கொண் டீக்கேல'' வெறுப்பும் கோப மும் ததும்பத் துடித்து விழுந் தார். மஹ்மூது லெவ்வை.

பஸியத்தும்மா போகத் திரும்பினுள்.

''தாபுள்ளே போப்போற யா? இந்த ராயிரூட்டில எங்க

போப்போறே? இந்தா சல்லி அம்பது ரூவா. இத நீ திருப் பித்தரவாணும். வச்சிக்கோ''

மஹ்மூது லெவ்வைதான் பேசுகிருரா?

பஸியத்தும்மா நின்று திரும்பினுள். கடைசீல அல்லா இரங்கிவிட்டார் என்று அவள் மனம் குளிர்ந்தபோது மஹ்மூது லெவ்வை மெல்லச் சிரித்தார். அந்தச் சிரிப்பு.

'அல்லாவே! புலியைக் கண்ட ஆட்டுக்குட்டி போலப் பின்வாங்கினுள் அவள்.

திரும்பியே பார்க்காமல் அவள் ஓடத் தொடங்கிய போது, மஹ்மூது லெப்பை பேசிய வார்த்தைகள் எதுவுமே அவள் காதுகளில் விழவில்லை.

அந்த வீட்டின் வாசல் படியை மிதித்ததால் ஏற்பட்ட களங்கத்தைக் கழுவுவதேபோல, திடீரென்று சுழறிக்கொட்டிய மழை அவளைக் குளிப்பாட்டியது.

நனைந்து தொப்பலாகக் குடிசைக்குத் திரும்பிய பஸ்ஸியத்தும்மா, குடிசைக்குள் ஊற்றிய மழை ஒழுக்கில் நனைந்து கொண்டு குய்யோ முறையோ என்று ஓலமிட்ட குழந்தைகளை ஓடிப்போய் அணைத்துக் கொண்டாள்.

தாய்க்கோழியின் சிறகுக்குள் அடைக்கலம் புகுந்த குஞ்சுபோல கொடுகிக் கொண்டிருந்த கடைக்குட்டி மழை ஒழுக்கையே இமைகொட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள். அப்புறம் தன் மழலை மொழியில் ''வாப்பா வந்துட்டா, இந்த ஒழுக்கெல்லாம் இல்லாமச் செஞ்சி பூடுவார் இல்லையா உம்மா'' என்ருள்.

அவளை இறுக அணைத்துக் கொண்டு விம்மினுள் பஸ்ஸியத்தும்மா. அவள் உள்ளம் பிரார்த்தித்தது.

''அல்லாவே! இந்த நிலையில் அவர் ஊட்டுக்கு வரவே வாணும். இஸ்பிர்த்தாலயிலே சொகமா இரிக்கட்டும் நாளைக்கி அஸனு லெவ்வை வந்து ஊட்டவுட்டு விரட்டினு குந்தியிரிக்க இடமும் இல்லாம போயிடும். கையில்லாத நிலையில் அவர் அந்தக் கஷ்டத்தை அனுபவிக்க வாணும்...... வாணும் ''

*　　*　　*

மறுநாள் புலர்ந்தது.

விடிந்ததும் விடியாததுமாக அந்தச் செய்தியும் ஆஸ்பத்திரியிலிருந்து வந்தது.

நேற்றிரவு இஸ்மாயிலுக்கு 'டெட்டனஸ்' உண்டாகி உயிர் போய் விட்டதாம்.

பஸ்ஸியத்தும்மாவின் பிரார்த்தனை இப்படிப் பலிக்கும் என்று யார்தான் எதிர்பார்த்திருக்கமுடியும்? *

---

ஒன்று நன்ருக இருக்கின்றது என்பதனுல் நாம் எதனையும் விரும்பவில்லை; நாம் விரும்புவதால் மாத்திரமே ஒன்று நன்ருக இருக்கிறது.

— ஸ்பைனுேசா.

---

உண்மைக்கதை - 3.

# பயங்கர வேட்டை

## எஸ். சிதம்பரப்பிள்ளை.

"அப்பா, அப்பா! இங்கே வந்து பாருங்கள் மூன்று யானைகள் என்னுடைய ஆறுவயது மகள் சரோஜா துள்ளி அடித்துக் கொண்டு என் முன் வந்தாள்.

"இல்லை அப்பா, யானை மாதிரி பெரிய எருமை மாடுகள்" என்று எனது மகன் சிவநாதல் (வயசு 4) ஓடோடியும் வந்து சொன்னர்.

எங்கள் "பங்களா" அம்பாறைக் குளக்கரையின் ஓரம் அமைதியான சூழலில் அமைந்திருந்தது. வீட்டு விருந்தையில் இருந்தபடியே குளத்தைப் பார்க்கலாம். நான் எட்டிப்பார்த்தேன். அன்று காலை எங்கள் விருந்தினர்களாக வந்திருந்த எனது மனைவியின் சகோதரியும் சற்று வளர்ந்த இரு பெண் குழந்தைகளும், எனது மனைவியும் குளக்கரை ஓரத்தில் நின்று வேடிக்கை பார்ப்பது தெரிந்தது.

அப்பொழுது எனது "கடைசிக்குட்டி" சந்திரபாலன், (வயசு 3) தத்தித் தத்தி வந்து கொண்டிருந்தார். அவரை நான் பாதி வழிக்குப் போய் சந்திக்க வேண்டி இருந்தது. அவருக்கு அதுதான் விருப்பம். நான் அவரை ஓடிப்போய் தூக்கியதும், அவர் குளத்தைச் சுட்டிக் காட்டி "அது, அது ஆனை அப்பா! — அப்பா, அப்பா நானும் வருவேன் என்னையும் கூட்டிக்கொண்டு போங்கள் அப்பா" என்று தொடர்பு இல்லாமல் சொன்னர். அவரையும் தூக்கிக் கொண்டு குளக்கரைக்குச் சென்றேன்.

ஆம். அங்கே வந்த விருந்தினருக்கு காட்சி அளித்தன மூன்று யானைகள். இது அக்காலத்தில் சர்வசாதாரணமான காட்சி.

தன்னுடைய உறவினரை ஜீப் வண்டியில் சுற்றிக்காட்ட வேண்டும் என்ற ஆசை எனது

மனைவிக்கு நிறைய இருந்தது. அதை என்னிடம் சொல்லியும் விட்டாள்.

அப்போது குறிப்பறிந்து நடக்கும் நண்பனைப்போல் ஜீப் டிரைவர் சேனநாயக்கா ஜீப் வண்டியில் வந்து விட்டார். சேனநாயக்கா சீனன் 902 இலக்க ஜீப் வண்டியை ஓட்டும் உத்தம ஊழியன். விசுவாசமான பணியாள் சிறிது நேரத்தில் எங்கள் எல்லோரையும் ஏற்றிக் கொண்டு ஜீப் வண்டி புறப்பட்டது. மாலை நேரமாகையால் எனது 16ம் கண் துவக்கையும், 6 தோட்டாக்களையும் ஐந்து நாலாம் நம்பர், ஒன்று எஸ். ஜீ. (குண்டு) இவைகளை நான் வழக்கம் போல் எடுத்துச் சென்றேன்.

இறக்காமம் என்னும் கிராமம் அம்பாறையில் இருந்து 8 மைல் தூரத்தில் உள்ளது புதிய பாதை ஒன்று அடர்ந்த காட்டுக்கூடாக அமைத்திருந்தார்கள். அதன் வழியாகப் போய் மீண்டும் வேறொரு வழியால் திரும்பினால் ''அந்த றவுண்டு'' சரியாய் அமையும். அதிர்ஷ்டம் இருந்தால் பல பறவைகள். மான் மரை யானைக்கூட்டங்கள் முதலியவற்றை வழியில் காணலாம். வசதியானால் புறு, கீச்சான் இவைபோன்ற பறவைகளைச் சுடவும் முடியும்.

அன்றைய அதிர்ஷ்டம் காட்டு மாடுகளுடன் நின்றுவிடும் போல் இருந்தது. திரும்பும் வழியில் இருட்டாகி விட்டது. டிறைவர் சேனநாயக்காவுக்கு எதையுமே சுடுவது பிடிப்பதில்லை. வெளியில் சொல்லாமலே இருந்து விடுவார். அவருக்கு அன்று சற்று நிம்மதி. ஆனால் எனக்கோ, விருந்தினருக்கு ஏதாவது சுட்டு நமது திறமையைக் காட்டிப் பெருமைப்படமுடியவில்லையே என்ற ஏக்கம்.

ஜீப் வண்டி ஒரு கட்டத்தில் வளைந்து போகவேண்டி இருந்தது. அப்போது ஜீப் வண்டி வெளிச்சத்தில் திடீரென காட்டுப் பன்றிகள் சில ஒன்றன்பின் ஒன்றாகப் பாதைக்கு குறுக்காக ஓடி வந்தன. அப்பொழுது சற்றும் யோசிக்காது நான் வண்டியில் இருந்தபடியே நாலாவது பன்றிக்கு நாலாம் நம்பர் தோட்டாவால் சுட்டுவிட்டேன். சேனநாயக்கா வண்டியை நிறுத்தி விட்டார். வண்டி வெளிச்சத்தில் பன்றி பாதையின் அருகாமையில் 10, 12, யார் தூரத்தில் கரணம் போடுவது தெரிந்தது. நான் உடனே வண்டியை விட்டு இறங்கி இன்னொரு தோட்டாவை அவசர அவசரமாய் போட்டு இரண்டு அடிகள் எடுத்து வைக்கவில்லை அதற்குள் ஏதோ என்னை நோக்கி பாய்வது போல் இருந்தது. நான் உடனே சுட்டேன். அப்பொழுது என்ன செய்வது என்று அறியாது திணறினேன். காரணம் பன்றி கரணம் போட்ட இடத்தில் இல்லை. நான் நின்ற இடத்துக்கும் ஜீப் வண்டி இருந்த இடத்துக்கும் 3 யார் தூரம் தான் இருந்தது. அப்பொழுது ஜீப்பின் அருகில் ஏதோ வீழுந்து மோதியது போல் ஒரு சத்தம் கேட்டது. பின் அமைதி. எனக்கு அதிர்ச்சி. நான் திணறுவதைக் கண்டு சேனநாயக்கா அருகாமையில் ஓடி வந்தார். நான் அப்படியே அசையாது நின்று விட்டேன். அசைய முடியாது போல் இருந்தது. ஆம் பன்றி என்னைக் கண்டு தாக்குவதற்கு வந்தது அதிஷ்டவசமாக ஜீப்

வண்டியைத் தாக்கிவிட்டு வீழ்ந்தது. எல்லாமே ஓரிரு விநாடிகளில் முடிந்து விட்டது. ஆம் பன்றி இறந்து விட்டது. அசைவு இல்லை. ஜீப் வண்டியை பின் நகர்த்தி செனஞயக்கா இறந்த பன்றியை எல்லோருக்கும் காட்டி எனது பெருமையை விளக்கினர்.

பன்றி என்னைத் தாக்கவில்லை. என் உடம்பில்கூடப் படவில்லை. ஆனல் நான் நின்றபடியே நின்றேன். என் உள் உணர்வு ':எவ்வளவு அபாயத்தை உன் திமிரான பெருமையால் வரவேற்ருய்'' என்று சுட்டிக் காட்டுவது போல் இருந்தது. எனது மனைவி எனது கையைப் பிடித்து "வாருங்கள் போதும் இந்தப் பன்றி வேட்டை'' என்று கடுகடுத்தாள்.

உணர்ச்சி வசப்பட்ட என்னை அறிவு கிண்டிவிட்டது. உடனே நான் சமாளித்துக் கொண்டு ஜீப் வண்டியில் மீண்டும் ஏறிக்கொண்டேன். நிலைமையை நான் மாற்ற வேண்டி இருந்தது. உடனே ஒன்றும் நடக்காததுபோல் கலகலப்பாகப் பேசி பெருமை அடித்துக் கொண்டேன். பிள்ளைகள் யாவரும் பெருமையாக பன்றியைப்பற்றி பேசிக்கொண்டே வந்தார்கள்.

எனது நண்பர் திருவாளர் குரேசியர் ஒரு "காட்டுப் பன்றிப் பிரியர்'' நான் பங்களாவுக்குத் திரும்பினதும் அவர் என்னைக் காணவந்தார். பிள்ளைகள் அவருக்கு விஷயத்தைச் சொல்லி விட்டார்கள். உடனே அவர் வேலையாள் சுந்தரத்தை அழைத்து தனது ஜீப் வண்டியில் அப்பொழுதே பன்றியைத் தூக்கிப் போட்டுக் கொண்டு சென்றுவிட்டார்.

அடுத்த நாள் அதிகாலை ஏதோ பெரிய சத்தம் கேட்டு துள்ளி எழுந்தேன். எனது நண்பர் திருவாளர் குரேசியர் அவர்கள் என்னைக் கூப்பிட்டபடி கதவடியில் நின்று கொண்டிருந்தார். முழு விசளம் சரியாய் இல்லை பன்றி ஓடிவிட்டதோ என்ற நினைப்பே என் மனதில் எழுந்தது. வெளியில் எட்டிப்பார்த்தேன், ''கனவு இன்னும் தெளியவில்லையோ. வாரும் ஒரு 'கப்' காப்பி

## ஈழத்து எழுத்தாளர் வெளியிடும் நூல்களுக்கு இலவச விளம்பரம்.

ஈழத்து எழுத்தாளர்கள், தனிப்பட்ட முறையில் ஈழத்தில் வெளியிடும் நூல்களுக்கு 'மலர்' சஞ்சிகையில் இலவசமாக விளம்பரம் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்வாறு விளம்பரம் பெறவிரும்பும் எழுத்தாளர்கள், தாங்கள் வெளியிடும் நூலின் ஒரு பிரதியுடன் விண்ணப்பிக்க வேண்டும். 1-1-70 முதல் வெளிவரும் நூல்களுக்கு மட்டுமே இத்திட்டம் அமைவதாகும்.

— ஆசிரியர்.

எனது பங்களாவிலேயே பருகலாம்'' என்று அழைத்தார்.

நாங்கள் அம்பாறையில் அயல் வீட்டவர்கள் மட்டுமல்ல, நெருங்கிய நண்பர்களும் கூட. அவருடைய பங்களா சென்றதும் காப்பி தயாராய் இருந்தது. பருகியபடி பின்பக்கம் சென்ளேம். இது தான் நீர் சுட்டுக் கொன்ற பன்றி'' என்று ஒரு பெரிய எருமைமாடு போன்ற கொம்பன் காட்டுப் பன்றியைச் சுட்டிக் காட்டினுர். நானு இத்தனை பெரிய பன்றியை சுட்டேன்'' என்று ஆச்சரியப் பட்டேன்.

கடந்த இரவு பன்றி எனக்கு அவ்வளவு பெரியதாகப்படவில்லை. பன்றியையும் அதன் கொம்பு நகம் உறுதியான உடல் இவைகளையும் பார்த்து நான் மேலும் மேலும் திகில் அடைந்தேன். நான் எவ்வளவு பெரும் அபாயத்தில் இருந்து தப்பினேன். நினைக்க நினைக்க நடுக்கமாக இருந்தது. குரேசியர் சிரித்துக்கொண்டே ''இந்தப் பன்றியை நீர் கொல்லவில்லையானுல் அது உம்மைக் கொன்று தீர்த்திருக்கும்'' என்ருர்''

''இறைவன் தான் என்னைக் காப்பாற்றினுர்'' என்றேன் நான்.

''நான் உம்மை ஒரு கோழையாகவே மதித்து வந்தேன். அன்று நீர் மலைப்பாம்பைக் கண்டு மருண்டீர். இன்று கொம்புப் பன்றியைக் கொன்ற அஞ்சா நெஞ்சன் ஆகிவிட்டீர்'' என்று சொல்லி என்னைத் தேற்றினுர். நான் உள்ளூர நடுங்கிக் கொண்டிருந்தது அவருக்கு எப்படித் தெரியும்?

விருந்தினரைக் கண்ட பெருமை கலந்த வேடிக்கை நினைப்பால் பன்றியைச் சுட்டது என்னவோ உண்மை தான். ஆனுல் நான் ஜீப் வண்டியை விட்டுக் கீழே இறங்கினது எவ்வளவு பெரிய மடமை! இருந்தாலும் இந்த நினைவுகளைத் தள்ளி, எதற்கும் பயப்படாத தைரியசாலியாக என்னைப் பக்குவப்படுத்தி ஒரு புன் சிரிப்புடன் "உமக்கு என்ன, மாமிசம் கிடைத்து விட்டது. கொண்டாட்டம் தான்'' என்று சொல்லி விட்டு எனது பங்களாவுக்குத் திரும்பினேன். எனது மனைவியும் பிள்ளைகளும். விருந்தினரோடு எனது பெருமையைச் சொல்லிப் புகழ்ந்து கொண்டிருந்தனர்.

நான் கடந்த இரவு கொண்டுபோன தோட்டாக்களை எடுத்துவைக்கும் போது பார்த்தேன் 4 தோட்டாக்கள் தான் மிஞ்சி இருந்தன. நான் அன்று இரவு இரண்டாம் தடவையாகச் சுட்டது என்னிடம் இருந்த ஒரே ஒரு குண்டு தோட்டாவால் தான். என் அதிர்ஷ்டம் அத்துடன் பன்றி விழுந்து விட்டது. கஷ்டகாலத்திற்கு, அக்குறி தவறியிருந்தால் என் கதி என்ன ஆகியிருக்கும்!

அன்றையில் இருந்து இன்றைவரை நான் துவக்கை கையால் தொட்டதும் இல்லை. என்னுடைய 16ம் நம்பர் துவக்கு நான் வருடம் தோறும் ',லைசன்ஸ்'' புதுப்பிக்கும்போது என்னைப் பார்த்துச் சிரிப்பதுபோல் இருக்கும். ★

# எழுத்து ரத்தினங்கள்

"பெண்ணின் அழகு! மலரின் அழகு! மானின் அழகு! எல்லாமே ஆபத்துக் கருவிகள்! அழகற்றிருப்பதே பெண்மைக்குக் கவசம்! அழகான பெண்ணைக் கண்ட மனிதன் அவளை உடலாற் கற்பழிக்காவிட்டாலும், மனதாற் கற்பழித்து விடுகிறானே!"

கதை:— "இதயக்குமுறல்"
கதாசிரியர்:— செம்பியன் செல்வன்.
['கலைச்செல்வி' சிறுகதைப்போட்டியில் முதற்பரிசுக் கதை[

ஃ ஃ ஃ

"உலகம் விசித்திரமானதுதான். அநாதையாக இருக்கையில் திரும்பிப் பாராது, ஓர் நிலையை அடைந்துவிட்டால் ஒட்டாத உறவையும் ஒட்ட வைத்து, 'என்ன இருந்தாலும் ரத்தமில்லையோ' என்று சொல்லி புனிதமான இரத்தபாசத்தையும் மாசுபடுத்தி... சே!...

கதை:— "உணர்ச்சிக்கு அப்பால்..."
கதாசிரியர்:— செம்பியன் செல்வன்.
[இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடாத்திய அகில இலங்கைச் சிறுகதைப்போட்டியில் மூன்றும் பரிசுக்கதை]

— இரா. சரஸ்வதி — ஸ்பிறிங்வலி.

ஃ ஃ ஃ

வானவில்லின் கோலமயக்கம்; புல்நுனியில் நித்திலப் பொலிவு காட்டும் நீர்த்துளியின் அழகு... இப்படித்தான் வாழ்க்கை அமையுமென்று ஆருடம் பார்க்கவோ, கவித்துவமாகக் கற்பனை செய்யவோ இயலாத பாமரன் அவன்.

சிறுகதை:— "வேலி"
(1969 ஜுன் 'இளம்பிறை')
கதை:— எஸ். எல் .எம். ஹனிபா

ஃ ஃ ஃ

இலக்கியங்கள் மனித உள்ளத்தை ஒரு பொழுது உலகின் துன்பச்சுழற்சியிலிருந்து விடுபடச்செய்து, மனிதனின் ஆத்ம அமைதிக்கு வழிவகுக்கின்றன. இலக்கியம் வாழ்வதற்கு மனிதனும் மனிதன்வாழ இலக்கியமும் அவசியமாகிவிட்டது.

கட்டுரை:— "சீறுவில் இறையோடும் தத்துவக்கற்பனை"
'இன்ஸான்' 23—11—68. வை. அஹ்மத்.

ஃ ஃ ஃ

"ஏண்டவாப்பே! சிங்களவனே சக்கிலியனே எங்கட கணயத்தப் போக்க ஒதவுருனுக. உள்ளோம் ஒரு கொமருக் குட்டி ஊட்டுக்குள்ளுக்கிருந்து கெழவியாப் போறதெண்டு அவளக்கரைசேக்க ஒதவிகேட்டும் ஒரிசாத்துக்கும் ஒதவல்ல பள்ளிதக்கியாவையும் வீடு வாசலையும் அலங்கரிச்சி உலகத் துக்குச் சோகாட்டுருனுக அல்லாத்தஆலாநாயன் எல்லாத் தையும் பாத்தோண்டுதானே இருச்சிய"

கதை:- புண்ணியத்தின் பாதுகாவலர்கள்.
ஆசிரியர்:— மொயீன்ஸமீன்ன்.
ஏப்ரல் 10 இளம்பிறை

**அபூஷனுபா, ஓட்டமாவடி.**

ஃ ஃ ஃ

"பாவங்களைச் செய்து பாவமன்னிப்பு பெற்று, மீண்டும் பாவகங்களைச் செய்து வருகிறவர்களிலும் பார்க்க—பாவங்களைச் செய்துவிட்டு உண்மையில் மனம் வருந்தி, பாவமன்னிப்பு பெற்று மீண்டும் பாவம் செய்யாதவர்களுக்கு பரமமண்டலத்திலே கட்டாயம் இடம் கிடைக்கும்"

"கடைசிநாள் மன்னிப்பு"
ஈழநாடு 18-12-68

ஃ ஃ ஃ

"கடவுளால் படைக்கப்பட்ட மனிதனுடைய உடல் ஓர் அதிசயமான இயந்திரம். என்ன திரவியத்தைத்தான் வயிற்றிலே போட்டாலும், அது குணம் கெட்டு, மணம் கெட்டு! ஆனல் மனிதனே ஆக்கிய இயந்திரத்திலே, இதற்கு நேர்மாருக அமைந்து விடுதல் ஆச்சரியமே! அசுத்தங்களைக்கூட இந்த இயந்திரம் சீரணித்து, தூய்மையும் அழகும் மணமுள்ளதாகவும் மாற்றிவிடுகின்றது. கடவுளையும் மிஞ்சிவிட்டான் மனிதன்.

"ஊனக் குழந்தை: ஈழநாடு, 24—2—69"

ஃ ஃ ஃ

"சதா வணங்கிக்கொண்டிருக்கும் பக்தனுக்கே பெரும் சோதனையாக உள்ளகடவுள்—துன்பம் வந்தபோது இறைஞ்சும் எனக்கா அருள்புரிவான்! பக்தர்களின் பெரும் துன்பமாகிய வறுமையையே தீர்க்க தயங்கும் கடவுள்—பெரும் இன்பத்தைத்தரும் காதலைப் பூரணப்படுத்தவா உதவப் போகின்ருன்! கடவுள் தன்னைக் கடவுளாக்கிக்கொண்டான்.

"கண்மூடாமல் கண்ட கனவு: தினகரன், 28-5-70"

**கே. மணி, பம்பலப்பிட்டியா.**

ஃ ஃ ஃ

# வள்ளல் சீதக்காதி.

ஹாபிஸ் எம். கே. செய்யது முகம்மது.

இற்றைக்கு மூன்று நூற்றுண்டுகளுக்குமுன் தமிழகத்தில் வாழ்ந்த இஸ்லாமிய பெருவள்ளல் சீதக்காதி. வள்ளலின் இயற்பெயர் ஸையிது அப்துல்காதிறு. இது மருவி சீதக்காதியாயிற்று. சீதக்காதி மரைக்காயர் என்றும் மக்கள் அழைத்தனர். 9-வது நூற்றுண்டில் 'எகிப்து' என்று இன்று அழைக்கப்படும் அன்றைய 'மிசிர'த்திலிருந்து காயல் பட்டணம் வந்து குடி புகுந்த மரக்கலராயர் பரம்பரையைச் சேர்ந்தவராதலால் மரைக்காயர் என்று சிறப்புப் பெயர் கொண்டும் அழைக்கப்பட்டார் என்பர். 'மரக்காயரி'ன் திரிபுதான் 'மரைக்காயர்.' கப்பல் தலைவர் என்பது இதன் பொருள்.

தமிழகத்திலுள்ள நெல்லை மாவட்டத்திலுள்ள காயல் பட்டணத்தில் பிறந்தார் என்பது வரலாற்று ஆசிரியர்கள் கண்ட முடிவு. தமிழ் மொழி ஆராய்ச்சி வல்லுனர் திரு. பூரணலிங்கம்பிள்ளை தமது 'தமிழ் இலக்கியம்' என்ற நூலிலும் ரஸிகமணி திரு டி. கே. சிதம்பரநாதமுதலியார் தமது 'இதய ஒலி'யிலும் கம்பர் தரும் காட்சியிலும் இது பற்றி எழுதியுள்ளனர். கலாநிதி உ. வே. சாமிநாத ஐயரின் முன்னுரையுடன் 1937ல் வெளிவந்த 'மதுரைத்தமிழ் பேரகராதி' யிலும் அறிஞர்கள் குழுவால் ஆய்ந்து ஆராய்ந்து சென்னைப் பல்கலைக்கழகம் 1926ல் வெளியிட்ட கலைக்களஞ்சியத்'திலும் வேறு பல ஆராய்ச்சி நூல்களிலும் வள்ளல் சீதக்காதியின் பிறந்தகம் காயல்பட்டணம் என்பதைக் குறிக்கப்பட்டுள்ளது.



வள்ளல் சீதக்காதி ஏழையாகப் பிறந்து உழைப்பினுல் உயர்ந்து பெரும் தனபதியானுர் என்றும் திருச்செந்தூருக்குச்சென்ற ஒரு முனிவரின் ஆசிபெற்று புதையல் கிடைக்கப்பெற்ருர் என்றும் கர்ண பரம்பரையாக ஒரு கூற்று நிலவிவருகிறது.

ஆரம்பத்தில் முத்துத் தொழிலில் ஈடுபட்டார். இதில் பெரும் புகழும் பெற்ருர். அரிசி மிளகு வேறு பல

பொருள்களையும் ஏற்றுமதிசெய்து திரைகடலோடி திரவியம் திரட்டினார். பல கப்பல்களை வைத்தார். பல தொலைதூர நாடுகளுக்கெல்லாம் இவரின் கப்பல்கள் போக்குவரத்து செய்தன. இலங்கை, பர்மா, சைனா, மலேசியா, சிங்கப்பூர், ஜாவா, கிரீஸ், பிரான்ஸ், ஹர்லந்து, மற்றும் பல நாடுகளிலும் இந்தியாத் துணைக்கண்டத்திலே ஆந்திரா, கேரளம், மஹாராஷ்ட்ரம், குஜராத், வங்காளம், பஞ்சாப், டில்லி, ஆக்ரா மற்றும் பல பகுதிகளிலும் வர்த்தக நிலையங்கள் நிறுவியிருந்ததாகவும் இலங்கையிலே கண்டியிலே பெருமளவில் வர்த்தகம் செய்ததாகவும் உமறுப்புலவர் சீதக்காதி திருமண வாழ்த்தில் கூறி இருக்கிறார்.

17வது நூற்றாண்டில் கிழக்கிந்திய கொம்பெனி (East India Company) என்ற ஒரு ஆங்கிலேய வர்த்தகக்குழுவின் பொறுப்பில் இந்தியாவின் பல பகுதிகளில் மேலாதிக்கம் இருந்தது. கி. பி. 1639ல் சென்னையில் ஒரு கோட்டையை நிறுவி அதில் தங்களின் வர்த்தக தலைமைபீடத்தை அமைத்தனர். சென்னை கவர்ணராக இருந்த வில்லியம் கைபோர்ட் என்பவர் அந்த வர்த்தக நிலையத்தின் முதல் நிர்வாகத் தலைவர். இந்த கொம்பேனியார் 2 – 12 – 1686ல் வள்ளல் சீதக்காதியுடன் ஒரு வர்த்தக உடன்படிக்கை செய்துள்ளனர்.

இலங்கையின் சில பகுதிகளும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு வந்தன. ஆங்கிலேயர்கள் சிலரை சிங்கள (கண்டி) மன்னர் கைதுசெய்து வைத்திருந்தார். சேதுநாட்டை அரசோச்சிய விசயரகு நாதத்தேவருக்கும் சிங்கள மன்னருக்கு நெருங்கிய நட்பு நிலவிவந்தது. சேது மன்னருக்குச் சென்னை கவர்னர் ஒரு நிருபம் எழுதினார். அதில் தம் செல்வாக்கை உபயோகித்து ஆங்கிலேய கைதிகளை விடுவித்துத் தருமாறு கேட்டிருந்தார். சேதுமன்னர் வள்ளல் சீதக்காதியின் உற்ற நண்பர். சென்னை கவர்னருக்கு ஒரு பதில் நிருபம் எழுதினார். ஆங்கிலேயக் கைதிகளை விடுவிக்க ஆவன செய்வதாகவும் அதற்குப்பகரமாக தம் நண்பர் சீதக்காதிக்கு சென்னையில் வர்த்தக உரிமையும் ஆங்கிலேயர்களுக்குள்ள வரிச்சலுகைகள் உட்பட எல்லா சலுகைகளும் அளிக்கவேண்டுமெனக் கேட்டிருந்தார். அது சமயம் எலிஹூஏல் என்பவர் சென்னை கவர்னராக இருந்தார். கொம்பேனி கூட்டத்தைக் கூட்டினார் அவர். அதன்படி 30 - 1 - 1690ல் சீதக்காதிக்கு பலசலுகைகள் அளித்து ஒரு உடன்பாடு செய்துகொண்டார். சீதக்காதிக்கு வர்த்தக உரிமையும் ஆங்கிலேயர்களுக்குள்ள எல்லா சலுகைகளும் கிடைத்தன.

மோகலாய மாமன்னன் ஔரங்கஜீபின் காலம் இது. டில்லியைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்துகொண்டிருந்தார். செஞ்சி கோட்டைவரை மோகலாயப்படை வந்துவிட்டது. ஔரங்கஜீப் ஒரு உண்மை இஸ்லாமிய பக்தர். அறிஞர்களை நேசிப்பவர். அதுகாலை வள்ளல் சீதக்காதியின் குருவாகவும் உற்ற நண்பராகவும் இருந்த பேரறிஞர் சதக்கத்துல்லா நாயகம் அவர்களின் மேதாவிலாசம் ஔரங்க

ஜீப் மாமன்னன்வரை எட்டியிருந்தது. இருவருக்குமிடையில் கடிதத்தொடர்புகளும் இருந்தன. வங்காளத்துக்கு மா அதி காரியாக சதக்கத்துல்லா நாயகம் அவர்களை நியமித்தார் ஔரங்கஜீப். இப்பதவியை நாயகம் அவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனல் இப்பதவிக்கு எல்லாவகையிலும் பொருத்த மானவர் சீதக்காதிதான் எனக்கண்டு மன்னருக்கு தெரிவிக் கவே அப்பதவிக்கு வள்ளல் சீதக்காதி நியமிக்கப்பட்டார். வங்காளத்தின் கவர்னராக சிலகாலம் பதவிவகித்து அங் குள்ள வெட்பம் தட்பம் ஒத்துவராததால் பதவியைத் துறந்துவிட்டு தமிழகம் திரும்பிவிட்டார். வந்ததும் ஔரங்க ஜீப் மன்னருக்கு சுண்டைக்காய் பருமனுள்ள நல்முத்துக் களைக்கொண்ட ஒரு மாலையைப்பரிசாக அனுப்பிவைத்தார். மன்னரும் வள்ளலுக்கு பெறுமதிமிக்க பல பரிசுகளை அனுப்பி கௌரவித்தார்.

இராமனுதபுரம் கோட்டையை அமைக்க வள்ளல் சீதக்காதி நிரம்ப ஆள்களும் பணமும் கொடுத்துதவியதாக ''இராமனுபுரம் மனுயல்'' என்ற வரலாற்று நூலில் குறிப் பிடப்பட்டுள்ளது. சேது நாட்டின் ஆக உயர்ந்தவிருது "விசய ரகுநாத பெரியதம்பி" என்றபட்டம். இந்த பட்டத்தையும் சீதக்காதிக்கு அளித்த கௌரவத்தோடு தமது முதல் அமைச்சராகவும் நியமித்தார்.

தீந்தமிழிலே பெருமானுர் (ஸல்) அவர்களின் வரலாற் றைக்கூறும் ஒரு காவியம் வெளிவரவேண்டுமென்பது வள் ளலின் நெடுங்கால விருப்பம். நல்லமுறையில் புராணம் பாடத்தெரிந்த முஸ்லீம் புலவரைத் தேடிக்கொண்டிருந்தார் வள்ளல். வாத வாரிதியை வாதில் வென்று வாகைமாலை சூடி, எட்டையாபுரத்தில் அவைக்களப்புலவராக இருந்த இளைஞர் உமறுப்புலவரின் பெரும்புகழ் தமிழகமெங்கும் பரவி நின்றது. அவரைப்பார்க்க எட்டையபுரம் சென்ருர். தம் விருப்பத்தைக்கூறினுர். அறிஞர் சதக்கத்துல்லா நாயகம் அவர்கள் இடமும் அவர்களின் தலைமைச்சீடர் அறிஞர் மஹ மூது தீபி நாயகம் அவர்கள் இடமும் உரைபெற ஒழுங்கு செய்துகொடுத்தார். புலவரும் புரவலரின் விருப்பத்திற்கு ஒப்பினர். 'ஸீரு' புராணம்பாடி முடித்தார். ஆனல் 'ஸீரு' முற்று பெறுவதற்கு முன்பே வள்ளல் காலமாகிவிட்டார்.

ஒரு வகையான செயற்கை மரகதக்கல் தொழிற்சாலை ஒன்று நிறுவினுர். இத்தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள் களை இலங்கையிலிருந்து பெற்ருர். வர்த்தகத்திலும் தொழி லிலும் அவருக்கு கிடைத்த வருமானங்களை மக்கள் நன்மைக் காகவும் கலையை வளர்க்கவும் கொடுத்து உதவினுர்.

சீதக்காதியின் கரம் ஈந்து சிவந்தது என்றும் சீதக் காதி இறந்தபோது புலமையே செத்துவிட்டது என்றும் படிக்காசுப்புலவர் பாடியிருக்கிருர்.

கி. பி. 1709ல் தமிழகத்தில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. நான்கு வருடகாலம் இப்பஞ்சம் நீடித்தது. ரூபாய் ஒன்றுக்கு 36 படியாக விற்ற அரிசி ரூபாய் ஒன்றுக்கு

ஒருபடியாக வந்துவிட்டது என்றால் பஞ்சம் எவ்வளவு கொடுமையாகயிருந்திருக்கவேண்டும்! அதற்கும்கூட கிடைக்கக் கூடாத கட்டமும் ஏற்பட்டது. பஞ்சம் ஆரம்பித்த அடுத்த வருடமே சீதக்காதியின் உற்ற நண்பர் சேது மன்னன் விசயரகுநாதத்தேவர் இறந்துவிட்டார். கிழக்கிந்திய கொம்பெனியாராலும் பஞ்சம் நீக்க முடியவில்லை. இந்நிலையில் சீதக்காதிவள்ளல் முன்வந்தார். தம் நாவாய்களை பல நாடுகளுக்கும் அனுப்பி தானியங்களைக் கொணர்ந்து பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு வாரிவாரி வழங்கினார். பசிப்பிணி போக்கினார். 'பசிப்பிணி மருத்துவர்' என்ற புகழ் பெயரும் இவருக்குண்டு.

பொன்னுக்கு நெல் சமமாக விற்குங்காலத்திலே மக்களின் பசிபோக்க வள்ளல் சீதக்காதி மார்தட்டி முன் நின்ற பெருமையைப் படிக்காசுப் புலவரின் ஏட்டிலிருந்து படிப்போம்:—

''ஓர் தட்டிலே பொன்னும்
ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட்டிய பஞ்ச காலத்திலே
தங்கள் காரியப்பேர்
ஆர் தட்டினுந் தட்டு வாராமலே
யன்னதானத்துக்கு
மார் தட்டிய துரை
மால் சீதக்காதி வரோதயனே''

புலவர்களின் நிறைவு குறைவு பாராது புலமையின் தகுதி தெரிந்து பரிசளித்து தமிழ் வளர்த்தார் வள்ளல் சீதக்காதி.

மதுரையிலே பூங்கோதை என்றொரு தாசி இருந்தாள். அவள் புலமையிற் சிறந்தவள். ஒரு நாள் இரவு கள்ளர்கள் அவளின் உடமைகளை எல்லாம் களவு எடுத்துக்கொண்டு சென்றுவிட்டனர். களவு கொடுத்துவிட்ட பூங்கோதை சீதக்காதிஇடம் ஓடோடிவந்து

''தினங் கொடுக்குங் கொடையாகவே
தென் காயற்பதியானே சீதக்காதி
இனங்கொடுத்த வுடமையல்ல தாய்
கொடுத்த வுடமையல்ல எளியாளாசை
மனங் கொடுத்து மிதழ் கொடுத்து
மபிமானந்தன்னைக்கொடுத்து மருவிரண்டு
தனங்கொடுத்த வுடமையெல்லாங்
கள்ளர்கையிற் பறிகொடுத்துத்தவிக்கின்றேனே.

என்று கூற மனமிரங்கி ஐயாயிரம் பவுன் அன்பளிப்பு செய்து கௌரவித்து பாதுகாப்புடன் அனுப்பிவைத்தார் வள்ளல் சீதக்காதி.

தமிழகத்திலே வள்ளல் சீதக்காதி காலத்திலே ஒரு புலவர் இருந்தார். அவர்பெயர் ஒருங்காபுலி. இப்புலவர் தான் சீதக்காதிமீது ''நொண்டி நாடகம்'' பாடியவர்.

திருட்டுத்தொழிலை தொழிலாகக் கொண்டவர். பரத்தையர் இல்லங்களைத் தம் விடுதிகளாக்கிக் கொண்டவர். மோகலாயர் சேனை நெஞ்சிக்கோட்டையை முற்றுகையிட்டுக்கொண்டிருந்த சமயம் சேனை வாடிவிட்டிருந்த மனையினுள் புகுந்து குதிரை ஒன்றைக் களவு எடுக்க கையும் மெய்யுமாக பிடிபட்டு காலும் கையும் வெட்டப்பட்டு விடப்பட்டார். அப்புலவர் தம் இழிசெயலால் வந்த வினையை நொந்து புலம்பித் தேம்பி அழுதுகொண்டே பாடிக்கொண்டிருந்ததை அவ்வழியே சென்னையிலிருந்து வர்த்தக நோக்காக பல்லக்கில் சென்றுகொண்டிருந்த வள்ளல் சீதக்காதியின் தம்பி கண்டார். புலவரின் நிலையறிந்து மனமிரங்கி உதவியதோடு தம் சகோதரன் இடம் வருமாறும் பணித்துச்சென்றார். காலும்

## மறக்கமுடியாத கல்விப் பணிப்பாளர்

வெ. சங்கரலிங்கம் என்ற பெயர் கல்வி வட்டாரத்திலே மிகப் பிரபலமானது; மிகப் பழமையானது. ஒரு தந்தையின் கனிவும், ஒரு ஏழையின் தோழமையும் ஒரு குடிமகனின் எளிமையும் ஒருங்கே அமையப் பெற்ற உயர் அதிகாரி இவர். அதன் காரணமாக, பிரச்சினைகள் பலவற்றை மனிதத்தன்மையுடன் அணுகி எல்லோரது உள்ளத்திலும் குடிகொண்டுள்ளவர் இக் கல்விப்பணிப்பாளர். இவரது இளகிய உள்ளத்தைக் கண்டு இவர் நிர்வாகத்தில் கண்டிப்பு அற்றவர் எனச் சிலர் கருதினாலும், உண்மையில் அளவோடு தன் அதிகாரத்தைப் பிரயோகித்துத் தன் மனச்சாட்சியைத் திருப்தி செய்பவர் இவர்.



சில காலத்துக்கு முன்பு கிழக்கு ஜெர்மனியில் கல்விச்சுற்றுலா மேற்கொண்டு திரும்பியபோது இவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவங்களின்போதும் சில நாட்களுக்கு முன்பு மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மாறிச் சென்றபோது இவருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவங்களின்போதும், ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும் இவர்மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கின்றனர் என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. வளர்க இவர் தொண்டு!

—''மணி''

கையும் குணமாகி புலவர் நொண்டி நொண்டி வள்ளல் இடம் சென்று தம் குறைகளைக் கூறிப் பாடினார். தாம் சென்ற சமயம் வள்ளல் சீதக்காதி புலவர்கள் சூழ வீற்றிருந்த தைப்பாடுகிறார்:—

“சந்தமுத்தமிழ் தெரியுங்கல்வித்
தலைவர் மகிழ் உமருப்புலவருடன்
செந்தமிழ்த் கந்தசாமி புலவனுஞ்
சீராட்டி நற்றமிழ் பாராட்டவே”

“விஞ்சையற்கனுகூலன் காயலின்
விசயரகுநாத பெரியதம்பி
கஞ்சமலர்ப்பாகத்தைக் கண்ணாரக்கண்டு
களிகூர்ந்து தெண்டனிட்டேன்.”

ஒருங்காப்புலிப்புலவர் வள்ளல் சீதக்காதிமீது 224 பாக்களைக் கொண்ட ‘‘நொண்டி நாடகம்’’ ஒன்றைப்படைத்துள்ளார். இதில் தம் வரலாற்றையும் வள்ளல் சீதக்காதியின் பெருமையையும் சதக்கத்துல்லா நாயகம் அவர்கள் கையைப் பிடித்து இஸ்லாத்தைத்தழுவி திருந்தியதையும் ஹஜ்ஜுக்கு சென்ற சமயம் பெருமானார் (ஸல்) அவர்களின் றௌழா ஷரீபில் உறங்கியதையும் இறை அருளால் தமக்கு கையும் காலும் திரும்ப கிடைத்ததையும் வள்ளல் சீதக்காதி தமக்குப்புரிந்த பேருபகாரத்தையும் ‘‘நொண்டி நாடக’’த்தில் விளக்கியுள்ளார்.

உமறுப்புலவர் வள்ளல் சீதக்காதிமீது ‘‘திருமண வாழ்த்து’’ பாடியிருக்கிறார். இது 148 பாக்களைக்கொண்ட ஒரு கவிதைக்கொத்து. இதில் வள்ளலின் மணவிழா நிகழ்ச்சிகளை மிக அழகுபட வர்ணித்துள்ளார்.

நவரத்தின மாலைகளும் மல்லிகை, முல்லை, சண்பகம்,
பிச்சி, வெண்புனித, செந்தாமரை, செவ்வந்தி,
செவ்வாம்பல், மாதுளம்பூ இப்படியான மலர்களும்
தென்னம்பாளை, கதலி, இளநீர், எலுமிச்சை,
பிலா மற்றும் பல கனிகளும் நவரத்னவிளக்கு
சித்திரவிளக்கு, மணி விளக்கு, தூக்கு விளக்கு,
குத்து விளக்கு மற்றும் பல விளக்குகளும்
வகை வகையான தோரணங்களும் மணப்பந்தலை
அலங்கரித்தன என்றும் புலவர் வர்ணிப்பதோடு
வட்டாவேந்தி, செப்பேந்தி, பூ வந்தி அணி
அணியாய் பலர் நிற்பதையும் பொன்னம்பர்,
கஸ்தூரி, பூம்பன்னீர், சந்தனம், சவாது கமகம
என்று நறுமணத்தைப் பந்தல் எங்கும் அள்ளி
வீசுவதையும் பாடியுள்ளார். நாவலர்கள்,
பாவலர்கள், பண்டிதர்கள், வித்வான்கள்,
மன்னர்கள், பிரபுக்கள், எல்லோரும் புடைசூழ
தப்பு, சேரிகை, பெருமுரசு, நாதசுரம், கொம்பு,
சங்கு, மத்தளம், வீணை, உடுக்கை, இசைஒலிக்க
தீபங்களால் ஒளிமயமாக இருந்த
தெருக்கள் வழியாக வள்ளல் சீதக்காதி
பவனி வருவதைக் சித்தரிக்கிறார் உமறுப்புலவர்.

இதன்பின் மணமகளின் உடை அணி அலங்கார வர்ணனைக்கு வருகிறார் புலவர்.


சரிகைப்பூம்பட்டு, வச்ரம், உரிச்சட்டை, பச்சை, நீல மணிகள் பதித்த கழுத்தணி, அலுக்கொத்து கொப்புமணி
பூத்தொங்கல், தென்னப்பூ, சரப்பளி, பதக்கம்,
கொத்துவடம்,
தோள்மூடி, வளைபணி, அட்டியல், முன்னாகவளை,
பொற்கடையம், தண்டை, சிலம்பு. சதங்கை கட்டுசரம்,
பொற்சீலி, காலாழி, இப்படியான ஆடை, அணிகள்
அணிந் மூரு அலங்காரத்துடன் மணமகள் வீற்றி
ருப்பதையும் பாடிவிட்டு காழியார் 'குத்பா' ஓதி
''பாத்திஹா சொல்லி 'துஆ' ஓதியபின்
சீவிவைத்தபாக்கும்
வெள்ளை வெற்றிலையும் சவ்வாதும் சந்தனமும் வெள்ளி,
பொன் வட்டாக்களில் வர அள்ளி வழங்கும்
காட்சியையும்
சித்தரித்துவிட்டுப் புலவர் வாழி கூறி முடிக்கிறார்.

''சுலைமா னன்னபியும்
தோகை பல்கீசையும் போல்
அலையாத செல்வமொடு
அழகாக வாழ்ந்திருப்பீர்''
''மன்றாட்டமுள்ள
முகம்மது கதீஜா போல்
நன்றாயிருவீரும்
நலமாக வாழ்ந்திருப்பீர்''
''விளங்கும் அலியுல்லாவும்
வீவி பாத்து முத்தையும் போல்
வளங்குலவ மென்மேலும்
வாகுபெற வாழ்ந்திருப்பீர்''

''அன்பும் அறனும் உடைத்தாயின் இவ்வாழ்க்கை பண்பும் பயனும் அது'' என்ற பொய்யா வாக்குக் கொப்ப பர்தாவுக்கேற்ற பதிவிரதையாய் வாழ்ந்தால் வள்ளலின் மனைவி.

வள்ளல் சீதக்காதி இறந்தார். புலவர்கள் அழுது புலம்பினார்கள். ''பூமகளும் புவிமகளும் நாமகளும் இருந்து என்ன பிரயோசனம் தமிழ் வளர்த்த வள்ளல்தான் போகி விட்டாரே'' என நமசிவாயப் புலவர் தேம்பி தேம்பி அழுதுஅழுது கையறம் பாடியுள்ளார். ''சீதக்காதி திரும்பவும் பிறந்தாலொழிய புலவர்களுக்கு வாழ்வு ஏது? எனப் பாடுகிறார் படிக்காசுப்புலவர். வள்ளல் சீதக்காதியின் கல்லறையைத் தரிசிக்கப் படிக்காசுப்புலவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச்சேர்ந்த கீழக்கரைக்குச் சென்றதாகவும் அங்கு அவர் சமாதியிலிருந்து ஒரு மோதிரம் அணிந்தவிரல் நீண்டதாகவும் அதைப்புலவர் எடுத்துக்கொண்டதாகவும் கர்ணபரம்பரையான ஒருகூற்று நிலவிவருகிறது. அதன் காரணமாகவே ''செத்துங் கொடை கொடுத்த வள்ளல்'' என்றபெயர் அவருக்கு வழக்கில் இருந்து வருகிறது. வள்ளலை நினைவு கூரும்முகமாக தமிழ்நாடு அரசாங்கம் சென்னையின் ஒரு பகுதிக்கு ''சீதக்காதி நகர்'' என பெயர் வைத்துள்ளது. புலவர்களைக்காத்து தமிழ் வளர்த்த புரவலர் இஸ்லாமிய செம்மல் வள்ளல் சீதக்காதிக்கு தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் நினைவுச்சின்னங்கள் எழுப்புவோமாக!

# ஏனிந்த மோகம்?



மல்லிகை மொட்டந்த மங்கை — அவள்
மாந்தளிர் மேனிக்கு இருக்கின்ற சங்கை
அல்லிக் குளத்தினில் வாழும் — அந்த
அன்னத்துக் கென்மீது ஏனிந்த மோகம்?

காந்தள் ஒளிர்கின்ற கண்கள் — அந்தக்
கண்பட்ட வேகத்தில் நான்பட்ட புண்கள்
கூந்தல் சுருள்கின்ற மேகம் — அந்தக்
கோதைக்கு என்மீது ஏனிந்த மோகம்?

கொவ்வைப் பழத்தினை வெல்லும் — அவள்
கொங்கையோ காதல் மனங்களைக் கொல்லும்
செவ்வாய் திறந்தாலே பாதும் — அந்தச்
சித்திரச் சோலைக்குள் சேர்ந்திடும் யாதும்.

கன்னிப் பருவத்துப் பொன்னாள் — பெண்மை
கனிகின்ற போதவள் ஏதேதோ சொன்னாள்
என்னில் எதைக் காணுகின்றாள் — அவள்
இதயத்தில் வைத்தென்னை ஏன்பேணு கின்றாள்.

ஒருநாள் அவள்வந்து என்னை — "தங்கள்
ஊமைக்குப் பொருளென்ன?" என்றவள் தன்னை
ஆருமே அறியாமல் கேட்டாள் — அந்த
அழகென்னும் மயிலென்னில் காதலைப் போட்டாள்.

இணையாகும் உணர்வொன்றிப் போனேன் — அவள்
எழிலுக்குள் தேனுண்ணும் வண்டாகிப் போனேன்
துணையாகித் துவள்கின்றாள் என்னில் — அந்தத்
தோகைக்குள் சிக்கித் துடிக்கின்றேன் மண்ணில்,

**மாறன் — யூ. செயின்.**

# வீசும் தென்றல்

## ''பண்டாரவன்னியன்''
## நாடகநூல் வெளியீட்டு விழா

கலைக்கழகப் பரிசுபெற்ற ''பண்டாரவன்னியன்'' என்னும் நாடகநூல் வெளியீட்டு விழா சென்ற 24-7-70 வெள்ளிக்கிழமை இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி P. பூலோகசிங்கம் அவர்கள் தலைமையில், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரித் திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது. நூலாசிரியர் ''முல்லைமணி'' அவர்களுக்கு பொன்னுடை, விருது முதலிய கௌரவங்கள் அளிக்கப்பட்டன. இலக்கியப் பிரமுகர்கள் பலர் இவ்விழாவில் பங்குபற்றினர்.

## அகில இலங்கைத்
## தமிழ்த் தின விழாப் போட்டிகள்

அகில இலங்கைத் தமிழ்த்தின விழாப் போட்டிகள் இவ்வாண்டு மட்டக்களப்பில் நடைபெறவிருக்கின்றன. ஆகஸ்ட் மாதம் 13ம், 14ம், 15ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இப்போட்டி நிகழ்ச்சிகள் மட்டுநகர் மாநகர மண்டபத்திலும், அர்ச். மைக்கேல் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறும் இதற்கான ஏற்பாடுகளை பிரதம கல்வி அதிகாரி ஜனுப். எம். சமீம் அவர்கள் ஒழுங்குசெய்துள்ளார்கள்.

## ஈழத்துப் பாரதியார் கவிதைகள்
## வெளியீடு

சென்ற 15-7-70ம் திகதி ''ஈழத்துப் பாரதி''யின் கவிதைத் தொகுதியான ''ஈழத்துப் பாரதியார் கவிதைகள்'' என்ற நூல் வவுனியா முற்றவெளி மைதானத்தில் எழுத்தாளர் சுகனுவின் தலைமையில் அரங்கேற்றப்பட்டது. வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினர் பிரதம அதிதியாக இவ்விழாவில் கலந்துகொண்டார்.

---

### வருந்துகிறோம்

தமிழகத்தின் பிரபல படைப்பிலக்கிய எழுத்தாளர் கு. அழகிரிசாமி அவர்கள் காலமான செய்தி அறிந்துவருந்துகிறோம். அன்னரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், இலக்கிய அன்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். —''மலர்'' வெளியீட்டுக் குழுவினர்.